# கிராமநலம்

செப்டம்பர்-65







## மாபெரும் புதிய மின்சார உற்பத்தி நிலையம்

'மட்டூர் மலைக்குடைவு மின்சார
-ற்பத்தி நிலையத்தின்
-தலாவது யூனிட்டை, 16-8-65-ல்,
-தலமைச்சர்
-யக்கி வைத்தார்.

மின்சார உற்பத்தி
நிலையத்தின் தோற்றம்.

## சென்னையில் ராஜஸ்தான் மாநில ஆய்வுக்குழு

பஞ்சாயத்து - மாவட்ட ஆட்சி முறையைப் பற்றி நேரில் கண்டறிய, ராஜஸ்தான் அமைச்சர்களும் அதிகாரிகளும் (ஏழு பேர்) கொண்ட ஆய்வுக் குழுவினர் தமிழ் நாட்டிற்கு வந்திருந்து, உணவு அமைச்சர் திரு வி. இராமையா அவர்களையும் மற்ற அதிகாரிகளையும் கண்டு பேசினர் (ஆகஸ்ட் 22-25)



"வீர சுதந்திரம்-
வீறுடன் காப்போம்"

"கொடுமையை எதிர்த்து நடக்கும் உண்மையான போராட்டத்தில், அக்கறையின்றி ஒதுங்கி நிற்பது அல்ல, அஹிம்சை. நான் கருதும் அஹிம்சை, கொடுமையை எதிர்த்து மிகத் தீவிரமாகவும், உண்மையாகவும் போராடுவதாகும்."

—மகாத்மா காந்தி

"நமது பூமியின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாப்பதற்காக, நமக்கு எஃகுப்போன்ற மன உறுதி வேண்டும்."

—அமரர் நேருஜி

"பாரத தேசத்தின் மூலைக்கு மூலை, மக்களின் இதயம், ஒரே கருத்தில் இணைந்து செல்லவேண்டும்."

—நேதாஜி சுபாஷ்

# கிராமநலம்

மாடி 10 செப்டம்பர் 1965 படி 12

## தியாக வேள்வியின் தீர சாதனை

### முதல் அமைச்சரின் சங்கநாதம்

"பாகிஸ்தானின் எல்லையோரங்களிலிருந்து ஆயுதம்தாங்கிய படைகளை அழகிய காஷ்மீர்பகுதிக்குள் பாகிஸ்தான் ஏவி விட்டது. மாறுவேடத்துடனும் கபட எண்ணத்துடனும் அப்படைகளின் வீரமிலா ஆட்கள் ஊடுருவல் மூலம் குழப்பத்தை உண்டாக்கிய பின்னர், பாகிஸ்தான் ராணுவத்தின் மூலம் ஐம்முனை முழு வலிமையோடு தாக்க வேண்டுமென்ற ஒரு முன்னேற்பாடுடன் கூடிய சதித் திட்டத்தைப் பாகிஸ்தான் உருவாக்கியது. இச்சூழ்ச்சியை முறியடித்து நம்முடைய தாய்த் திரு நாட்டைக் காக்க வேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநிலம், போர்க்களத்திற்கு வெகு தூரத்திலே இருப்பினும், நாட்டின் வாழ்வுக்கு நேர்ந்துள்ள இப்பயமுறுத்தலை எதிர்த்து, தங்களுக்கிடையேயுள்ள பூசல்களையும், கருத்து வேறுபாடுகளையும் மறந்து ஒன்றெனத் திரண்டு, தாங்களும் நாட்டின் ஓர் அங்கமே என்பதை உள்ளங்கை நெல்லியென எடுத்துக் காட்டியுள்ளோம். ஆக்கிரமிப்பின் கொடுமையை எடுத்த எடுப்பிலேயே அனுபவித்திராத நாம், எந்த அளவிற்கு நாட்டின் தற்காப்பு முயற்சிகளிலே ஒத்துழைத்து, அரும்பாடுபட்டு அடைந்த சுதந்திரத்தை நாம் பேணிக் காக்க முடியும்? தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக விண்ணிலும் மண்ணிலும் பெரு வீரத்தோடு போரிட்டு நமக்குப் புகழைத் தேடித்தரும் நமது வீரர்களுக்கு நாம் எவ்வகையில் உதவமுடியும்?

நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதன் மூலமாகவே, நமது பாதுகாப்புப் படைக்கு நாம் சிறந்த வகையில் உருப்படியாக உதவி அளிக்க முடியும். அப்போதுதான், பகைவனைப் பணிய வைப்பதற்காக, நாட்டு மக்களின் ஆற்றல் முழுவதையும் ஒன்று திரட்டி ஈடுபடுத்த முடியும். நமது வேற்றுமைகள்அனைத்தையும் மறந்து, நாம் ஒவ்வொருவரும் நமது லட்சியத்தின் வெற்றிக்காக நம்மால் இயன்றதைச் செய்வதற்கு ஏற்ற தருணம் இதுவே.

---

## இந்த இதழ், அச்சேறும்பொழுது கிடைத்த கடைசிச் செய்தி

**ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், அந்த ஸ்தாபனத்தின் தலைமைச் செயலாளர் திரு ஊதாண்ட் அவர்களும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக, பாகிஸ்தான்—இந்திய போர் நிறுத்தம், 23—9—1965 காலை 3–30 மணிக்கு ஏற்பட்டுவிட்டது என்பதை, தெரிவித்துக்கொள்கிறோம். ஆயினும், மக்கள் சிவில் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு, எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.**

—ஆசிரியர்

“ எண்ணுகின்ற ஏழிரண்டு மொழிகள் பேசும் பாரதம்
எழுந்து நின்று கைகள் கோத்திணைந்து நிற்றல் பாரடா!”

---

*முன் பக்கத் தொடர்ச்சி :*

**உலக நாடுகள் அனைத்தும் கண்கொட்டாமல்** நம்மையே நோக்கும் இந்தத் தருணத்தில், வகுப்பு ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்கான தேவை, இன்று எழுந்துள்ளதைப்போல், என்றுமே எழவில்லை. பெரும்பான்மை வகுப்பினரைச் சேர்ந்த மக்களின் பொறுப்பு முன்னைக் காட்டிலும் இன்று அதிகமாய் உள்ளது. தங்களைச் சுற்றி வாழும் மற்ற சிறுபான்மை வகுப்பினர்களின் நலன்களை முற்றிலும் பாதுகாத்து, அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதுதான், அவர்களின் சிறந்த பொறுப்பாகும். சமய வேறுபாடற்ற நமது ஜனநாயகக் குடியரசின்கீழ் வாழும் பற்பல வகுப்பினர்கள் அனைவரையும், சம உரிமையுள்ள குடிமக்களாக நம்மைப் பிணைக்கும் இந்த உறவினை, மேலும் நாம் போற்றி வளர்க்க வேண்டியதுமன்றி, நமக்கு முன்னால் உள்ள இடர் மிகுந்த நாட்களில் அத்தகைய உறவினை நாம் மேன்மேலும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

சீன ஆக்கிரமிப்புத் தொடங்கிய வேளையில், ஊர்க்காவல் படை இயக்கத்தை நாம் துவக்கி வைத்தோம். இப்போது, இந்த இயக்கத்தை மேலும் விரிவாக்கிப் பலப் படுத்துவது அவசியம். மக்களின் பொது நன்மைக்கு தானே முன் வந்து சேவை செய்வதற்கு இந்த நாட்டு இளைஞர்களுக்கு அரியதொரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஊர்க்காவல் படை அமைப்பில் சேர்ந்து, இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் பரபரப்பையூட்டும் பொய்யான செய்திகளும், தவறான வதந்திகளும் பரவாமல் விழிப்போடு இருக்கவேண்டும். சரியான தகவலைக் கொடுத்துத் துணை செய்யவேண்டும்.

நவீனப் போர் முறை நிலைமைகளில் ஆயுதப் படையினரின் முயற்சிகளுக்கு நாட்டின் பாதுகாப்பு நோக்கமுள்ள உற்பத்திகள் பெருக வேண்டுமென்பதை, நாம் இத்தருணத்தில் மறக்கக்கூடாது. போர்முனையில் நவீன போர்ப் படையொன்று தன் பணியைச் செவ்வனே ஆற்ற வேண்டுமென்றால், நமக்கு பற்பல பொருள்களும் பணிகளும் தேவை. நமது பண்ணைகளிலும் தொழிற்சாலைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாகவே, இதைச் சாதிக்க முடியும். எனவே, உற்பத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள முதலாளிகள், நிர்வாக அதிகாரிகள், பல தரப்பட்ட தொழிலாளிகள், தேர்ச்சி பெறாத தொழிலாளிகள், நில உடைமையாளர்கள், குத்தகைதாரர்கள், பயிர்த் தொழில் செய்வோர் ஆகிய அனைவரும் தங்களால் இயன்ற வரையில் சிறந்த முயற்சிகளை மேற்கொள்வது, மிக மிக முக்கியமானதாகும். எல்லா நிலைகளிலுமுள்ள அரசாங்க ஊழியர்களும் இம்முயற்சியில் வெற்றி பெற்றேயாகவேண்டும் என்ற மன உறுதியுடன், இச்சமயத்தில் பணியாற்ற வேண்டும். இதனால் அவர்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் ஏற்படலாம். அவற்றை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்க முன் வரவேண்டும். பொது மக்களின் சாதாரணத் தேவைகளுக்கு அதிக இடையூறு ஏற்படுத்தாமல், தன்னலங் கருதாத இத்தகைய முயற்சிகளால்தான், பாதுகாப்புத் தேவைகளையும், பாதுகாப்பு நோக்கமுள்ள உற்பத்தித் தேவைகளையும் நாம் பூர்த்தி செய்ய முடியும்.

## அறம் வென்றே தீரும்

உற்பத்தியை அதிகரித்து, நம்மிடையே உள்ள சாதனங்களையும் மூலப்பொருள்களையும் நன்கு பயன்படுத்துவதில், தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் தோளோடு தோள் சேர்ந்து பணியாற்றவேண்டும்; இணைந்து செயல்படவேண்டும். கிடைத்ததற்கு அரிதான பொருள்களைப் பாதுகாத்து, அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். இயந்திரங்கள் கவனமாகப் பாதுகாக்கப்படவேண்டும்.அப்பொழுதுதான், உற்பத்தி தடைபடாது. எல்லாத் துறைகளிலும் திறம்பட உற்பத்தி அதிகரித்தால்தான், சரக்குகளும், உணவுப் பொருள்களும் இடையீடின்றிக் கிடைக்கும்.

பாகிஸ்தானின் ராணுவ சர்வாதிகாரத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட படையெடுப்பை முறியடித்து, நம் தாய்த் திருநாட்டைக் காப்பதற்காக ஆயுதம் தாங்கிய நம்முடைய படைவீரர்கள் மண்ணிலும் விண்ணிலும் அறப்போர் ஆற்றி வருகிறார்கள். வீரம் செறிந்த போர் வீரர்களின் முயற்சிகளை மேலும் வலப்படுத்தும் வகையிலே நாட்டில் ஏனைய பகுதியனரோடு நாமும் ஒன்றாக இணைந்து, இத்திருப்பணியில் நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோமாக! நம்முடைய போர் நீதிப் போர். அறப்போர். அது வென்றே தீரும்.”

[*தமிழ்நாடு முதல் அமைச்சர்* திரு எம். பக்தவத்ஸலம் *அவர்கள்* 10—9—65 *மாலை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்*]

---

“ மாற்றலருக் கெந்நாளும்வணங்காத சிரம் நமதே!
கூற்றுவரும் அஞ்சிடச்செய் கூர்ந்த கனல் விழிநமதே!”

உரிமையைக் காப்போம்—
உறுதியை வளர்ப்போம்

# "ஒன்றுபட்ட சிந்தனையினராய், வீறுகொண்டு எழுவோம்"

[நெருக்கடி நிலையில், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், கிராம வளர்ச்சி நெறியாளர் எழுதிய சிறப்புக் கடிதம்.]

அன்புள்ள நண்பர் அவர்களே,

சென்ற சில வாரங்களாக, காஷ்மீர் பகுதியிலே, அயலார் ஊடுருவி ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்த செய்தி கேட்டு, உங்களுக்கு ஆத்திரமும், வேதனையும் மிகுந்திருக்கும். அன்பு, அஹிம்சை, வாய்மை ஆகியவற்றைக் கொள்கையளவில் மட்டுமல்ல, நடைமுறையிலும், உள் நாட்டுப் பிரச்னைகளில் மட்டுமல்ல, சர்வதேச உறவுகளிலும், உறுதியாகக் கடைப்பிடித்து வந்துள்ள நம் நாடு, அன்னியரின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தற்காப்பு முறையிலே இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நாட்டிற்கு எழுந்துள்ள இந்தச் சோதனையை வெல்வதில், நமக்கு முக்கிய பொறுப்பும் பங்கும் உண்டு என்பதை மக்கள் அனைவரும் உணரச் செய்வதிலும், பொங்கியெழும் அவர்களின் ஆர்வத்தைப் பயனுள்ள, உருவான வழிகளிலே பாய்ச்சிப் பயன்படுவதிலும், பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற தாழ்மையான வேண்டுகோள் விடுவிக்கவே, உங்களுக்கு இக்கடிதம் எழுதுகிறேன்.

## "நம் வெற்றி, ஜனநாயகத்தின் வெற்றி"

"இந்தியா இன்று போரிடுவது ஒரு துண்டுப் பிரதேசத்திற்காக அல்ல. ஜீவாதாரக் கொள்கைகளுக்காகப் போராடி வருகிறோம். இந்தியாவின் சுதந்திரத்தையும், சமஷ்டி ஐக்கியத்தையும் (ஜம்மு, காஷ்மீரும் இதில் அடங்கியிருக்கிறது) பாதுகாக்க வேண்டியது, சுதந்திர நாடுகளின் பாதுகாப்புக்கு மிக மிக முக்கியம்.

இந்தியாவில் நடப்பது, சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம். பத்திரிகைகள் சர்வ சுதந்திரங்களையும் அனுபவிக்கின்றன. எல்லாச் சமயங்களையும் போற்றி மதிக்கும் மதச்சார்பற்ற நாடு இது. நாம் போரிடுவது ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து, கட்டுப்படுத்தப்பட்ட பத்திரிகைகளை எதிர்த்து, மதசசார்புள்ள நாட்டை எதிர்த்து. எங்களை போலல்லாமல் வேறு விதமாக சிந்திப்பவர்களின் சுதந்திரத்தைக்கூட நாங்கள் மதிக்கிறோம்.

ஜனநாயக நலனை உத்தேசித்து, நாம் வெற்றி பெற வேண்டியது அவசியம். இல்லாவிடில், ஆசியாவில் சுதந்திர ஜோதி அணைந்து விடும்."

—ராஷ்டிரபதி டாக்டர் இராதாகிருஷ்ணன்

## மக்களின் கடமை

பார் வியக்கும் வண்ணம் நமது போர் வீரர்கள் பெற்றுள்ள அற்புத வெற்றிகள் நமக்குப் பெருமிதம் அளிக்கின்றன. ஆயினும், போர் முனைக்குச் செல்ல வாய்ப்பு இல்லாமல்; நாட்டிலுள்ள கோடிக்கணக்கான குடி மக்கள், தங்களுக்குக் கிட்டிய வழிகளிலே இப்போர் முயற்சிக்கு உறுதுணையாகவும், ஆதரவாகவும் பணியாற்றினால் தான், இறுதியான வெற்றியை நாம் உறுதிப்படுத்த முடியும். மக்களின் நல்லாதரவையும் நம்பிக்கையையும் பெற்றதன் பயனாய் பொறுப்பேற்றுள்ள நீங்கள், இப்பணிகளிலே உங்கள் முழு சக்தியையும், செல்வாக்கையும், ஈடுபடுத்த வேண்டுமென்று கோருகிறேன்.

நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தை மிகைப்படுத்தி, அச்சமோ, பீதியோ கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும், இது வரையில் நீங்கி விடக்கூடிய இடுக்கண் என்று எண்ணியோ, வீரர்கள் பெற்று வரும் வெற்றிக்குப் பின்பு, நாம் இனி செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்று எண்ணியோ, நாம் மெத்தனமாக இருந்து விடக்கூடாது. இந்நிலையில் நாம் செய்யக்கூடிய முக்கியமான வேலை, மக்கள் அனைவரும், குறிப்பாக கிராமப் பகுதிகளிலே வசிக்கும் பாமர மக்களும், படியாதவர்களும், இந்தப் போராட்டத்தின் நோக்கினையும் போக்கினையும் உணர்ந்து, உண்மை நிலவரத்தைப் பற்றிய விவரங்களை அறியச் செய்வதுதான். இன்று நமது இராணுவம் தற்காப்பிற்காக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கையைத் தவிர வேறு வழியே நமக்கு இல்லை என்ற நிலைமையையும் நிர்ப்பந்தத்தையும், நம்முடைய எதிரிகள் ஓயாது செய்து வந்த சில்லரைச் சேட்டைகளும், சதிகார சூழ்ச்சிகளும் உருவாக்கி விட்டன என்பதை நம் மக்களுக்கு நாம் எடுத்துரைக்க வேண்டும். வரலாற்று அடிப்படையிலே கொள்கைப் பிரச்சினையை விளக்குவதோடு, போரிலே அன்றடம் நடக்கும் நிகழ்ச்சிகளையும், விவரங்களையும், உண்மை நிலை




யையும் மக்களுக்கு அவ்வப்போது எடுத்துரைத்து அவர்களுக்கு உணர்வும், உறுதியும் ஊட்டவேண்டும். இவ்வாறு உண்மையான செய்திகள் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கும்படி செய்து விட்டால், சமூக விரோதச் சக்திகள் செய்யக்கூடிய பொய்ப் பிரசாரத்தினுலோ, மேலெழுந்தவாரியாக வியாக்கியானம் செய்யும் மேதாவிகளின் சந்தேகப் பிரசாரத்தினுலோ, மக்கள் குழப்பமுருமல் காக்க முடியும்.

## வானெலி-சிறந்த சாதனம்

உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்கும் முயற்சியிலே பஞ்சாயத்துக்களின் ஆதரவிலே கிராமப் புறங்களிலே இயங்கும் வானெலிப் பெட்டிகள், மிக முக்கியமான ஒரு சாதனமாகும். இதனைச் சிறந்த முறையிலே செம்மையாகப் பயன்படுத்திக் கொள்ள உரிய நடவடிக்கைகள் அனைத்தையும், தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். பொது இடவசதி இல்லாத குறையினல் ஏதேனும் சில வானெலிப் பெட்டிகள் தனிப்பட்டவர் வீடுகளில் இதுவரை இயங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தால்கூட, அவற்றை உடனடியாக, பொதுவான ஓர் இடத்தில் வைத்து, மக்கள் அனைவரும் கூடிக் கேட்பதற்கு வசதி செய்ய வேண்டும். இப்போது போல் மாலையில் மட்டுமல்லாமல், காலையிலும், மாலையிலும், முடிந்தால் நடுப்பகலிலும், வானெலிப்பெட்டிகள் இயங்கினல், வானெலி நிலையத்தினர் ஒலிபரப்பும் செய்திகளையும் செய்தி விளக்க விமர்சனங்களையும், மக்கள் அடிக்கடி கேட்பதற்கு வசதியாக இருக்கும். சில வானெலிப்பெட்டிகள் பழுது பார்க்கப்படாத நிலையில் சரிவர இயங்காமல் உள்ளன என்ற குறை, ஒரு சில இடங்களில் கூறப்படுகிறது. உங்கள் யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்களில் எல்லா வானெலிப் பெட்டிகளும் ஒழுங்காக இயங்குகின்றனவா அல்லது பழுது பார்க்கத் தேவையா என்று, ஒன்று அல்லது இரண்டு தினங்களில் தகவல் தெரிந்துகொண்டு, பழுது பார்க்க வேண்டிய வானெலிப் பெட்டிகளை எல்லாம், கோட்டாட்சித் தலைமை அலுவலகத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தால், அவற்றை உடனடியாகக் கவனித்து, சரி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு வானெலிப் பெட்டிகள் நல்ல முறையிலே இயங்கச் செய்வது மட்டுமல்லாமல், கிராம மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றுள்ள நம் சமுதாய அபிவிருத்தித் திட்ட ஊழியர்கள் அனைவருமே, உண்மையை, மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியிலே, உற்சாகமாகப் பங்கு கொள்ள வேண்டும். குறிப்பாக, கிராம சேவகர்கள், கிராம சேவிகைகள், சமூக நல ஊழியர்கள், கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள் ஆகியோர் இதில் நல்ல சேவை செய்யலாம். படிக்கத் தெரியாதவர்களைக் கூட்டிப் பத்திரிகை செய்திகளைப் படித்துக்காட்ட, மனமகிழ் மன்றங்களையும், சமூகக் கல்வி நிலையங்களையும், மாதர் சங்கங்களையும் பயன்படுத்தலாம். போர்முனையிலே நம் வீரர்களின் வெற்றிப் பாய்ச்சலிலே பங்கு கொண்டு, நம் கிராம மக்களின் உள்ளங்களும் துள்ளிப் பாயச் செய்ய வேண்டும்.





அவ்வீரர்களின் வெற்றி எக்களிப்பும், சோதனையை வெல்ல அவர்கள் தாங்கும் வேதனையிலும், அவர்கள் ஆர்வத் துடிப்பிலும், உணர்ச்சிக் குமுறலிலும் நம் கிராம மக்களின் உள்ளங்களும் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்.

## மக்கள் பேரணியைத் திரட்டுவோம்

ஒவ்வொரு பஞ்சாயத்திலும், வீறு கொண்ட மக்களின் பேரணியைக் கூட்டுங்கள். வஞ்சகத் தாக்குதலை முறியடிக்க வெஞ்சமர் புரிவோம் என்று நீங்கள் செய்யும் உறுதி முழக்கம், விண்ணே அதிரச் செய்யட்டும்.

சீனர் தாக்கியதை ஒட்டித் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும், குக்கிராமங்களிலும் கிராமத் தொண்டர் படை உருவானது. அப்படைக்கு இன்று புத்துணர்வு ஊட்டிப் புதுவேகம் பாய்ச்சி, ஊரைக் காக்கவும், உறுதியை வளர்க்கவும், அத்தொண்டர் திருக்கூட்டத்திற்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும்.

எல்லையிலே இரத்தத்தைத் சிந்தச் சித்தமாகச் சென்றுள்ள நம் வீரர்களுக்கு, நாம் செய்யக்கூடிய சிறிய கைம்மாறு, அவர்கள் குடும்பத்தினர் கண்ணீர் சிந்தாமல் காப்பது.

உங்கள் பகுதியில் வாழும் போர் வீரர்களின் குடும்பங்களுக்குக் குறைகள் எதுவும் நேரிட்டால், அவற்றைப் போக்குவதற்கும், அவர்கள் உற்சாகம் பெறுவதற்கும் உரிய வசதிகளைச் செய்து தருவதற்கும், நீங்கள் விசேஷ முயற்சிகள் எடுக்க வேண்டும். அக்குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்ய, ஊர் மக்கள் கூடிச் சொந்த முறையிலும் முயற்சி எடுத்துக்கொள்ளலாம். உங்கள் பஞ்சாயத்தில் போதிய நிதி வசதி இருந்தால், அக்குடும்பங்களுக்கு உதவி செய்ய ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்க வகை செய்யும் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பினுலும் அதற்கு அனுமதி அளிக்கப்படும். தங்கள் குடும்பத்தினரை ஆதரிக்கவும், அன்பு காட்டவும் எண்ணற்ற பல சகோதரர்கள் கிராமங்களில் இருக்கின்றனர் என்ற நினைவிலும், நிம்மதியிலும், நமது போர் வீரர்கள், இன்னும் அற்புதமான சாதனைகளை ஆற்றுவர் என்பதில் ஐயமில்லை.

நாட்டில் இன்றுள்ள நிலையிலே, உழைப்பையும் திறமையையும் வளர்த்து உற்பத்தியைப் பெருக்குவதும், செலவைக் குறைத்துச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதும், நம் அனைவருக்கும் உரிய முக்கியமான பொறுப்புகள் ஆகும். பஞ்சாயத்து வேலைகளிலும், பஞ்சாயத்து யூனியன் வேலைகளிலும் அனுவசியமான ஆடம்பரமான செலவுகளை உடனடியாகக் குறைக்க, தாங்கள் ஆவன செய்வீர்கள் என்று நம்புகின்றேன். குறிப்பாக, பெட்ரோலைச் சிக்கனமாகச் செலவு செய்வது மிக அவசர, அவசியத் தேவையாகியுள்ள இன்றைய நிலையில், பஞ்சாயத்து யூனியன் ஜீப்களின் உபயோகத்தைக் குறைத்துக் கட்டுப்படுத்துவதில், கவனமும் கவலையும் காட்ட வேண்டும்.

## "ஆக்ரமிப்பை முறியடித்து வெற்றிவாகை சூடுவோம்"

"ஒவ்வொரு இந்தியனும் தனது கடமையை முழுமையுடனும், விசுவாசத்துடனும் செய்யவேண்டும். சந்தோஷமாக, சிரமங்களை மேற்கொண்டு தியாகங்கள் புரியக்கூடிய மனுேநிலையை தேசம் அடைய வேண்டும். சுதந்திரத்தைக் காக்க நாம் கொடுக்கவேண்டிய விலை இது.

பாகிஸ்தான் மக்களுடன், இந்தியா சண்டை பிடிக்கவில்லை. அவர்கள் நன்ருக இருக்க வேண்டும். நல்வாழ்வு வாழ வேண்டும் என்று நாம் விரும்புகிறேம். பாகிஸ்தான் மக்களுடன் அமைதியுடனும், நட்புறவுடனும் வாழ்வதே நமது விருப்பம்.

நம்மைப்போல் சுதந்திரத்திலும், ஜனநாயகத்திலும், அமைதியிலும் நம்பிக்கையில்லாத ஒரு சர்க்காருடன் தான், நாம் இப்போது போர் தொடுத்துள்ளோம்.

இத்தருணத்தில் நாட்டில் அமைதிக்கு பங்கம் விளையாமல் பாதுகாக்கவும், வகுப்பு ஒற்றுமையை நிலை நாட்டவும் நீங்கள் சாத்யமான தனைத்தும் செய்ய வேண்டியது உங்கள் தலையாய கடமை."

—பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி

பஞ்சாயத்து யூனியன் பணியாளர் அனைவருமே, தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணி எதுவாயினும், அப்பணியை, சென்ற வாரம் செய்து வந்ததைக் காட்டிலும், இன்று சிறப்பாகவும், செம்மையாகவும் செய்தால், அதுவே, போர் முயற்சிக்கு அவர்கள் செய்யும் பெரிய உதவியாகும். சமுதாய நல அபிவிருத்தித் திட்ட ஊழியர்கள் அனைவரும், இலட்சிய வேகத்துடனும், உறுதியுடனும் பணியாற்றி, நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்று, மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே நல்லுறவைப் பலப்படுத்தினுல், அது நாட்டைக் காக்கும் சீரிய பணிகளில் சிறந்ததொன்ருகும். இன்றைய சூழ்நிலையில், பொறுப்பற்ற முறையில் பணியாற்றுவதும், மக்களுடைய தேவைகளை மதிக்காமல் மெத்தனமாக இருப்பதும், நாட்டுக்குத் துரோகம் இழைப்பதாகும். நமக்குத் தரப்பட்டிருக்கின்ற பணியை நாட்டுக்குக் காணிக்கையாகப் படைக்க வேண்டும் என்ற புனித உணர்வுடனும், தொண்டு உள்ளத்துடனும் தியாக மனப்பான்மையுடனும், சமுதாய நலப் பணியாளர் அனைவருமே, செயலாற்ற வேண்டும்.

இன்று நாம் ஈடுபட்டிருக்கும் போர், நாம் வேண்டாத, விரும்பாத, வலியே நம்மீது சுமத்தப்பட்ட போராகும். நாம் அனைவரும் ஒன்றுபட்ட சிந்தனையினராய், ஒருமித்த முயற்சியினராய், உறுதி கொண்ட உணர்வினராய் வீறு கொண்டு எழுந்து, இச்சோதனையையும் ஒரு வாய்ப்பாக மாற்றி, வரலாற்றிலே இடம் பெறுவோம் வாரீர்.

சென்னை,
11—9—65

தங்கள் அன்புள்ள,
கா. திரவியம்

# சபதம் செய்வோம்

(நாஞ்சில் முஸ்தாபா)

காந்திமகான் வழிநின்று கடமை யாற்றி
கைகொண்ட சுதந்திரத்தைப் போற்றிக் காக்க
ஏந்திட்டோம் கரங்களிலே மக்களாட்சி
இந்நாட்டில் பதினெட்டு ஆண்டு தன்னில்
சாந்தமுடன் பலதிட்டம் அரசு தீட்டி
சாதனைகள் செய்வதையே எண்ணி எண்ணி
மாந்தரெல்லாம் வியக்கின்றார் பார தத்தின்
வன்மைநல் சுதந்திரத்தின் மேன்மை உணர்ந்து

தாழ்பட்ட எண்ணத்தை மாய்த்து மாந்தர்
தாரணியில் சமமென்ற சொல்லை நாட்டி
பாழ்பட்ட கிராமங்கள் இன்று அரசால்
புதுவாழ்வு பெற்றெங்கும் சிறக்க ; நாட்டை
சூழ்ந்திட்ட அறியாமை அகற்றி கல்வி
சாலைகள் விதவிதமாய்க் கட்டி நாட்டில்
வீழ்ந்திட்ட பசிப்பிணியைப் போக்க எங்கும்
விவசாயம் தலைதொழிலாய் கொள்ள லாச்சு

எழுத்துரிமை சொல்லுரிமை தலைவர் தேர்ந்து
எடுக்கின்ற ஓட்டுரிமை நமக் களித்து
ஒழுக்கமுடன் விதிமுறையின் முதன்மை நின்று
உயர்தலைவர் தேர்ந்தெடுத்து மக்க ளாட்சி
அழுத்தமுடன் நடத்திடவும் குறைகள் தீர்த்து
அன்புடனே ஒருகுலமாய் நாமும் வாழ
வழங்கிட்ட பாரதத்தின் உரிமை எல்லாம்
மாந்தரேற்ற சுதந்திரத்தின் மேன்மை அன்றோ ?

எல்லையிலே படைகுவித்து போர்த்தொடுத்து
இன்பமிகு சுதந்திரத்தின் இன்னல் விளைத்து
தொல்லையினை தருகின்ற எதிரி தன்னைத்
தொலைத்தின்று பாரதத்தில் அமைதி காண
நல்நெஞ்சில் வீரமேற்றுப் புனித நாளில்
நாமெல்லாம் உழைத்திடுவோம் உணவைப் பெருக்கி
வலிவுடனே முதுகாட்டி அவனை ஓட்ட
மென்மைநம் சுதந்திரத்தின் சபதம் செய்வோம்.

## வெற்றி முரசு கொட்டுவோம் !

(உதயை மூ. வீரையன்)

இசையில்லா வாழ்வுமொரு வாழ்வா ? தாங்கும்
இதயமில்லா மனமொரு மனமா ? விம்மும்
தசையில்லா உடலுமொரு உடலா ? என்றும்
தலைதாழ்ந்த நிலையுமொரு நிலையா ? எட்டுத்
திசையேற்கா நாடுமொரு நாடா ? நாட்டுத்
திமைமுன் நம்முயிர்ஓர் உயிரும் ஆமோ ?
விசையோடு படைக்கலனைக் கையில் ஏந்தி
வெற்றியுடன் முரசுகொட்டி பகையை ஓட்டு !

தண்ணீரில் கயல்துள்ளும் ; நாட்டைக் காக்க
தமிழர்க்கும் களத்தினிலே வீரம் துள்ளும் ;
கண்ணீரில் துயர்உண்டு ; நாட்டைக் காண
கலங்காத நெஞ்சிடத்தும் துன்பம் உண்டு
வெண்மையிலே மாசில்லை ; என்றும் நந்தம்
வீரத்தில் எண்ணத்தில் குற்றம் இல்லை !
மண்ணாசை வெறிபிடித்த மாற்று நாட்டான்
மண்டியிட்டுத் தோல்வியினை ஒப்ப வேண்டும் !

நத்தையினுள் முத்திருக்கும் ; நந்தாய் நாட்டார்
நடையெல்லாம் வீரந்தான் செறிந்தி ருக்கும் ;
கொத்துமலர் மணம்வீசும் ; களத்தில் மாற்றான்
கொலையுண்ட வெற்றுடல்தீ நாற்றம் வீசும் ;
சித்திரத்தில் உயிரில்லை ; பகைவன் மாட்டு
சிந்தித்துத் தேர்கின்ற அறிவும் இல்லை ;
ஒத்துழைத்து நிற்கட்டும் மக்கள் ; மாற்றான்
ஓய்ந்திடவே முரசறைந்து வெற்றி நாட்டு !

நெருப்புக்குக் குளிர் ஏது? பகையை மாய்க்கும்
நிகரில்லா வீரர்க்கும் அமைதி ஏது ?
இருட்போதில் கதிர் ஏது ? நந்தம் நாட்டில்
எதிரிக்குக் கால்வைக்க இடமும் ஏது ?
திருக்குறட்கு விலைஏது ? பகையை ஓட்டும்
திசைபுகழும் வீரர்க்கும் மதிப்பும் ஏது ?
விருப்புக்கு வெறுப்பேது ? எதிரி ஓட
வெற்றியுடன் முரசுகொட்டி விரைந்து செல்க !

[நாட்டின் பாதுகாப்பே, நமது தலையாய கடமை. அந்தப் புனிதப் பணியைச் செய்து வரும் நமது படை வீரர்களின் இலட்சணங்களையும், அவர்கள் பெறும் பயிற்சிகள் பற்றிய விவரங்களையும், இக் கட்டுரையில் காணலாம்.]



# கண்ணின் மணிகள்

இந்திய இளைஞன் வீரம் மிக்கவன். நாட்டின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவனாயினும், அவனுடைய நாட்டுப் பற்று மாண்பு மிக்கது. தேசத்தினிடத்து அவன் கொண்டுள்ள உயரிய, புனிதமான அன்புதான் ராணுவத்தில் சேர, அவன் முன்வருவதற்கு முதன்மையான காரணம். வாழ் நாள் முழுவதும் அயராத ஆயத்த நிலை; தியாகம், விசுவாசம், சிறிதும் மாசு இல்லாத கட்டுப்பாடு இவைதான் படை வீரனுக்கே உரிய பண்புகள்.

உள்ளத் திண்மையும், உடல் வலுவும், இடைவிடாத பயிற்சியின் மூலமாக அவன் பெற்றுவிட முடியும். அவன் கைகள் ஏந்த வேண்டிய ஆயுதங்களும், இயக்க வேண்டிய சாதனங்களும் நாளுக்கு நாள் மாறி வருகின்றன. அவற்றை அவன் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

## வீரனின் இலட்சணங்கள்

துணிவு, தலைமைத்திறன், ஒழுக்கக் கட்டுப்பாடு, மனஉறுதி, லட்சியத்தில் நோக்கு குழுவினருடன் பணியாற்றும் ஆற்றல் இவை, போர் வீரனுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள்.

ஒருவர் படையில் சேருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், ராணுவப் பயிற்சிப் பள்ளியில் அனுமதிக்கப் படுகிறார். தமது சீருடையை எப்படி அணிவது, ஆயுதத்தை எவ்வாறு பயன்படுத்துவது, என்பதையெல்லாம் அவர் அறிந்திருக்கவேண்டும். தம்மையும் தமது அணியையும் மட்டுமல்லாமல், நாட்டையும் கூட அவர் காத்துக்கொள்ள விருப்பதால், ராணுவத் தந்திரங்களும் அவருக்குத் தெரிந்திருப்பது மிக அவசியம்.

## தீவிரப் பயிற்சியின் அவசியம்

அவருக்கு இயற்கையாக அமைந்த உடல் வலிவுடன், ராணுவத்திற்கே உரிய இந்த அடிப்படைத் தேவைகளை அவர் தீவிரப் பயிற்சி மூலம் பெறுகிறார். உடலும், உள்ளமும், உரம் பெற்று, கட்டுப்பாட்டில் இழைந்து, முறுக்கேறியிருக்க, உடற் பயிற்சியும் ஆயுதப் பயிற்சியும் போர் நடவடிக்கைகளில் தீவிர பயிற்சியும் அவருக்கு அளிக்கப்படுகிறது. துப்பாக்கி முதலிய சிறிய ஆயுதங்களை முழு நம்பிக்கையுடன் கையாளுவதற்கு அவருக்குப் படிப்படியாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

போர்ப் பயிற்சி என்பது சாமானியமானதல்ல; நீடித்த கடுமையான பயிற்சி தேவைப்படும். சிற்சில சமயங்களில் படை வீரர்கள் கடுமையான சூழ்நிலைகளில் பணியாற்ற வேண்டியிருக்கும். குறிப்பாக, வடக்கு எல்லையில் மாபெரும் இமயமலைப் பகுதியில், கடும் குளிரில் விழிப்புடனிருந்து நாட்டின் பாதுகாப்பிற்கான சேவை புரிவது சற்றும் எளிதான காரியமல்ல. ஆயினும் இந்திய வீரர் இந்தச் சவாலை ஏற்கத் தயாராயிருக்கிறார். பிரதேசத்தின் கடுமையான தன்மையோ, பனி உறையும் வானிலையோ அல்லது, தனிமை உறைவிடமான அடர்ந்த காடுகளும், மலைகளுமோ இந்திய வீரருக்கு ஒரு பொருட்டல்லதான்; எதிர்நோக்கும் இன்னல்களைச் சமாளித்து எதிரியை வென்று வாகை சூட அவர் நிற்பதற்கு, அவர் பெற்றிருக்கும் தீவிர திட்டமிட்ட பயிற்சியே காரணமாகும்.

திறமை பெற்ற ஜவானுக்கு ராணுவத்தில் சிறப்பான எதிர்காலம்உண்டு மெட்ரிக்குலேஷன் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேர்ச்சி அடைந்துள்ள வீரர்கள், பூனாவிலுள்ள ராணுவ கேடட் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து, பயிற்சி பெறலாம். பின்னர் இந்திய ராணுவக் கழகத்தில், சேர்ந்து அதிலும் பயிற்சிபெற அவர்களுக்கு வாய்ப்பு உண்டு.

G.N.—2எ



“செய்க பொருளை, செறுநர் செருக்கருக்கும்
எஃகதனில் கூரியது இல்.”

—குறள்.

# வீர பாரதத் தாயின் ஆணை

(திரு. க. பெருமாள், எம். ஏ., தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் கலைக்கல்லூரி, சென்னை-2.)

(1) “ஏற்றத்தை மறந்து நம்மை
எளியராய் எண்ணி வந்து
சீற்றத்தோ டெதிர்க்கும் பொல்லாச்
சிறுமனப் பாகிஸ் தானை
ஆற்றல்சால் அருமை மக்காள் !
அணிவகுத்துடனே தாக்கி
கூற்றுக்கும் விருந்து வைத்துக்
கொணர்க, நல்வெற்றி” என்றுள்
யார் ?.. .. .. .. பாரதத்தாய் !

(2) “நஞ்செலாம் தோய்ந்த நெஞ்சால்
நட்பெலாம் மறந்து விட்டு
வஞ்சனைப் போர்கள் செய்யும்
வன்மனப் பாகிஸ் தானை
அஞ்சிடா தெதிர்த்துச் சீறி
அறத்தினை மறத்த லின்றி
வெஞ்சமர் புரிந்து மேன்மை
வெற்றியைக் கொணர்க” என்றுள்
யார்?.. .. .. .. பாரதத்தாய் !

(3) “கொக்குபோல் காத்துத் தாக்கும்
கொடியதோர் கலையால் எட்டுத்
திக்கையும் ஆட்ட வேட்கும்
சிறுமனப் பாகிஸ் தானை
தக்கபோர் அறத்தி னாலே
தகர்த்தெறிந் துலகி லுள்ள
மக்களைக் காக்கும் வெற்றி
மாண்பெலாம் கொணர்க” என்றுள்
யார் ?.. .. .. .. பாரதத்தாய் !

(4) “ஊழ்வினைத் தீமை யாலே
உலகெலாம் பழிக்கும் வண்ணம்
வாழ்வினைக் கெடுத்துக் கொள்ள
வஞ்சமும் சூதும் கொண்டு
பாழ்வெறிச் சீற்றத்தாலே
படையெடுத் தாடும் அந்தக்
காழ்மனப் பாகிஸ் தானைக்
களத்திடை வெல்க” என்றுள்
யார் ?..பாரதத்தாய்..வீரம்கண்டு

காளி தேவி நகைத்தனள்—
எமன் திகைத்தனன்

(5) அன்னை ஆணை ஏற்று நாங்கள் ஆற்றும் கடமை யாதெனக்
கன்னிப் பெண்கள் கேட்கக் கண்டு காளிதேவி நகைத் தனள் ;
சின்னத் தம்பி ஆணை ஏற்றுச் சிங்கம் போலச் சீறினன்
என்ன வீரம் என்று சொல்லி எமனும் துள்ளித் திகைத்தனன் ;

(6) பக்க வீட்டுக் காரர் போலப் பக்க நாட்டுக் காரரும்
ஒக்கல் போல ஒருவர்க் கொருவர் உதவி செய்து வாழ்தலே
தக்க தென்று தெரிந்து கொள்ளும் தகவில் லாத பகைவரைச்
சுக்கு நூறாச் சிதைத்துப்போடல் சுத்த வீரம் வீரமே !

(7) மக்கள் ஆட்சி மாட்சி எல்லாம் மதிக்கக் கல்லாப் பகைவரைத்
தக்க புத்தி கூறு வோரைத் தாக்க வல்ல கயவரைச்
சுக்குச் சுக்கா நூறி நூறிச் சூறை யாடும் வீரர்தம்
மிக்க வீரம்கண்டு தேவர் ‘ மேன்மை ! மேன்மை ! ’ என்றனர்.

உலகம், பரணி பாடிக்களித்தது

(8) ஊட்டி வளர்க்கும் நாட்டைக் காக்க உடலும் பொருளும் ஆவியும்
போட்டி போட்டுக்கொடுக்க வல்ல பொறுப்பு மிக்க மக்களை
ஆட்டி அசைக்கும் ஆற்றல் கூட அயூப் கானுக் கில்லெனப்
பாட்டில்ஏட்டில் உலகமெல்லாம் பரணி பாடிக் களித் ததே !

(9) வானம் எங்கும் மேகம் போல விரைந்து மோதி விரட்டுநம்
மானம் மிக்க வான வூர்தி படையின் முன்னர் உடைந் திடும்
சீனர் தோழர் பாகிஸ்தானர் சிந்தை கெட்டு விட்டதாம்
ஆனதாலே மானம் போக அபயதானம் வேண்டுமாம்!

# வதந்திகளை நம்பக்கூடாது

“ஒற்றர்கள், நாச வேலைக்காரர்கள், சர்க்காரை கவிழ்க்க முயலும் சூழ்ச்சிக்காரர்கள், இந்த நாட்டிற்குள் சமீப காலத்திலோ அல்லது அதற்கும் முன்னதாகவோ நுழைந்திருக்கலாம். இடைவிடாது உஷாராக இருந்து, அவர்களைக் கண்டு பிடித்து தீவிர நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம்.

எல்லா நிலைமைகளிலும், மக்கள் கட்டுப்பாடாக இருக்க வேண்டும், கடினமாக உழைக்கவேண்டும், கடமையை உண்மை உணர்ச்சியுடன் செய்யவேண்டும், இப்போதைய சண்டையில் வெற்றி பெற்று இந்தி யாவை வலிமையுள்ளதாக்கி, எதிர் காலத்தில் நமது நாட்டை யாராலும் படையெடுக்க முடியாதென்ற நம்பிக்கை, நம்மிடையே ஏற்படுவதற்கு மேற்கண்ட விஷயங்களே அடிப்படை.

வேண்டுமென்றே சில நபர்கள் ஆதாரமற்ற வதந்திகளை பரப்பக்கூடும். மக்களின் நம்பிக்கையை சீர் குலைப்பது, அவர்களுடைய நோக்கமாக இருக்கும். அவர்களை குற்றவாளிகளாக் நடத்த வேண்டும். நாம் கட்டுப்பாடாகவும், நிதானத்தை இழக்காமலும் நடந்துகொள்ள வேண்டும்.”

உள்துறை அமைச்சர் நந்தா

# குடியிருப்புத் திட்டம்



(திரு ஆர். ரங்காச்சாரி, சென்னை)

உணவு, உடை, உறைவிடம் (குடியிருப்பு) இம் மூன்றும் மக்களுக்கு முக்கியமானது என்று சொல்லுவது வழக்கம். "வருவதை மகிழ்ந்துண்" என்னும் பாரதி வாசகமும் வலியுறுத்தப்படலாம். குடி மக்கள் "பகிர்ந்துண்ணும்" பழைய இலக்கைப் போற்றுவது நலமேயாகும்.

ஏழைகளின் உடைப் பிரச்னை சம்பந்தமாக, அண்ணல் காந்தியின் வாழ்வில் ஏற்பட்ட இரு நிகழ்ச்சிகளை நாம் நினைவுறலாம். தமிழ் நாட்டில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்தபோது பலமக்கள் அரையில் ஒரு கோவணம் மட்டும் அணிந்து வயல்களில் வேலை செய்வதைக் கண்டார்; அது ஏழ்மையின் விளைவு என்று உணர்ந்தார்; அதிர்ச்சியுற்றார். தானும் இனி இடுப்பில் ஒரு சிறு துணியை மட்டும் உடுத்துவது என்னும் முறையை மேற்கொண்டார். வங்க நாட்டில் ஓரிடத்தில் அவர் தங்கியிருந்தபோது, ஓர் ஏழைக் குடும்பத்தினர் அவரைக்காண ஆவலாய் உள்ளதைக் கேட்டார்; அவர்களின் குடிசை தேடிச் சென்றார்; அங்கு குடும்பத் தலைவன் மட்டும் வெளிவந்து அவரை வணங்கினான்; மற்றையவர்கள்—முக்கியமாகப் பெண் இனத்தவர் வரவில்லை—ஏன் வெளிவரவில்லை என்று வினவினார். "அதற்குக் காரணம் 'பர்தா' முறையல்ல. அவர்கள் மானத்துடன் வெளிவரத் தேவையான ஆடையில்லாததே" எனத் தயக்கத்துடன் விடை வந்தது. சுமாரான ஒரே ஒரு ஆடையைக் குடும்பத்தினர் எல்லோரும் மாறி மாறி உடுத்துத் தனித்தனியே வெளிவர வேண்டிய நிலை அங்கு இருந்தது. இது கேட்டு, காந்தியடிகளின் உள்ளம் நைந்தது என்று சொல்ல வேண்டுமோ? வைணவ ஆசாரியரான இராமனுசம் பெருந்தகைக்கும் இவ் விதமான ஓர் அனுபவம் நேர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு சமயம் அவர் தன் சீடர்களோடு ஓர் அன்பரின் இல்லம் சென்றார். கதவு தாளிடப்பட்டிருந்தது, அதனைத் தட்டினார். கதவு திறக்கப் படவில்லை; ஆனால் வாயிற்பக்கத்துப் பலகணியின் அருகில், அவ் வில்லத்தாளின் முகம் மட்டும் தெரிந்தது; நிலைமையை உய்த்துணர்ந்த இராமானுசன், பலகணி வழியாய்த் தன்மேல் ஆடையை உள்ளே எறிந்தார். அதனை அணிந்த மாதரசி கதவைத் திறந்து, எல்லோரையும் வரவேற்றாள். பின்னரே, வெளியிற் சென்றிருந்த அவள் நாயகன் வந்து சேர்ந்தான். இந் நிலையில் இன்னும் யார் இருக்கின்றனரோ, நாம் அறியோம். மகாத்மாவைப் போற்றும் குடிமக்கள், தங்கள் ஆடைத் தேவையைச் சுருக்கிக்கொண்டு நாட்டில் துணி உற்பத்திப் பெருக ஆவனவெல்லாம் செய்வது சீரிய கடமையாகும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து, இன்னொன்றும் தெளிவாகும். உணவோ, ஆடையோ இல்லாது போயினும், ஒரு தனிக்குடியிருப்பு இருந்தால் மனிதன் தன் குறையை வெளிக்காட்டாது மானமாய் வாழ்வான் என்பதே; இதனையே அவன் விரும்புவான். "எலி வளை யாயினும் தனி வளை வேண்டும்" என்னும் பழமொழியும் இதற்குச் சான்று. மனித குமாரன் (Son of Man) என்று அழைத்துக் கொண்ட இயேசு பெருமான் ஒரு சமயம் சொன்னார்:—

> "குள்ள நரிகள் இருக்க நிலத்தில் வளை யுண்டு; பறவைகள்
> உறைய மரக்கிளைகளில் கூடு உண்டு; ஆனால் மனித குமாரனுக்குத்
> தன் தலையைச் சாய்த்துப்படுக்க இவ்வுலகில் இடமில்லை"

நம் மக்களில் எத்தனை பேருக்கு—முக்கியமாய் நகரங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு இன்னும் இந்தப் பரிதாப நிலை உள்ளது!

குடியிருப்புப் பிரச்னையே மிகமிக முக்கியமானது எனலாம். இதுவே பொது மக்களின் மன அமைதியின்மைக்கும், புரட்சி மனப்பான்மைக்கும் மூலம். ஆகவே அரசாங்கங்கள் இவ் விஷயத்திற்கு முதலிடம் அளித்துக் கவனிப்பது பொருத்த முடையதாகும். இதற்காக, உலக அபிவிருத்தி நிறுவனங்களிலிருந்து உதவி கேட்டுப் பெறுவதும் தக்கதே. நகரங்களில் நெருக்கடியைக் குறைக்க, நாட்டுப்புறங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்குவதும் முறையே.

குடியிருப்புப் பிரச்னையைத் தீர்க்க முயலும் போது, எத்தகைய நோக்கமும் முறையும் இருத்தல் சிறப்பு என்பதை இப்போது சற்றுக் கவனிப்போம்.

### புதுக் குடியிருப்புத் தொகுதிகள் (Land Colonies)

நம் நாட்டில், காட்டைத்திருத்தி மக்களுக்கு நல்ல புதிய குடியிருப்புகளை ஏற்படுத்துவதில், சீரிய வழிகாட்டியாய் விளங்கியவர், என்றுமுள தமிழ் தந்த அகத்திய முனிவரே. அம் முனிவரை, அரணியத்தில் கண்ட இராமன், காட்டுப் பகுதிகள் நாடான விந்தையை விளக்கும்படி கோரினான். அப்போது அகத்தியர் இப்படி விவரித்தார் என்று வால்மீகி இராமாயணம் கூறுகின்றது:—

"இந் நிலப் பகுதி பல்லாண்டு பாழடைந்து கிடந்தது. ஒருகால், நான் தெய்வச் செயலாய், இமய வரையினின்றும் இங்கு வந்தேன். பொல்லா வனத்தைத் திருத்த மனம் கொண்டேன். வெகு காலமாய் மழையின்றி நிலம் வறண்டு போவதை உணர்ந்தேன். மழை பொழியப் பல சாதனைகள்

---

"தியாக வாழ்வே இன்பத்தின் எல்லை;
நாடு உங்களிடம் எதிர்பார்ப்பதுவும் இதுவே!"

செய்தேன். காட்டில் யமனின் பணியாளர்கள் பல பிணி உருவாய் இருப்பதைக் கண்டு, அவைகளின் மூலகாரணத்தை அகற்றினேன், பிறகு காட்டைத் திருத்திக் குடியிருப்பாய் அமைத்த இடங்களைச் சுற்றிலும் இமய வரையிலுள்ள மூலிகைகள், மணம் கமழ் மரங்கள், இவைகளைக்கொணர்ந்து, வளர்த்தேன். நறும்புனலொடு நதிகள் ஓடலாயின. மலர்கள் செறிந்த ஓடைகளும், வாவிகளும் என்னால் ஆக்கப்பட்டன. நிலம் வளம் பெற்றது. பயிர்கள் ஓங்கி வளர்ந்தன. அந் நிலையில் முனிவர்களை ஆங்காங்கு குடியிருக்கச்செய்தேன். அவ்வப்போது வந்து துயர் இழைத்த அரக்கர்களையும் கூடிய வரையில் ஒழித்தேன். அவர்களை முழுவதும் அழித்து நாட்டைச் சேமமுறச் செய்வது இனி உன் கடமை.''

புதுக் குடியிருப்புத் திட்டங்களை அமைக்கும்போது நல்வாழ்வைக்கருதி என்னவெல்லாம் முன்னதாகச் செய்யப்படவேண்டும் என்பதை மாமுனிவரின் வாக்கு சற்று தெளிவர்க்கும்.

### வீட்டு வசதி

ஏழைக் குடி மக்களுக்கு வீடுகளைக் கட்டும் போது, அவை பொதுப் பணித் துறையின் மாதிரிக்கு (Type Design) ஏற்ற கட்டிடங்களாக இருக்க வேண்டுமென்று கருதக்கூடாது. சொல்லப்போனால், அவைகளை கற்கட்டடங்களாகவோ, சிமிட்டிக் கட்டடங்களாகவோ நிறுவ முயல்வதும் தவறு எனலாம். ரவீந்திரநாத தாகூர் தன் சாந்தி நிகேதனத்தின் சில பகுதிகளை மண்கொண்டே அழகுற அமைத்ததை இங்கு எண்ணிப்பார்க்க வேண்டும். பழைய காலத்தில், நம் நாட்டில் களிமண்ணுடன் வெல்லப்பாகு. முட்டைக்கரு, இவைகளைச் சேர்த்துத் திருத்தி, கோட்டைகளும் ஆக்கப்பட்டன. அவை மிக்க உறுதியாய், பீரங்கிக் குண்டுகளாலும் இடிபடாமல் நின்றன என்று சரித்திரம் கூறுகிறது. [உதாரணம் பரத்பூர் கோட்டையும், ஜெனரல் லேக் (General Lake) என்பவரின் தாக்குதலும்.]

விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந் நாளில், ஆங்காங்கு கிடைக்கும் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி, உறுதியான சுவர்களையும், தளங்களையும், மலிவாய் ஆக்கும் முறைகள் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டு, வழக்கத்திற்கு கொண்டுவரவேண்டும். வீடுகளை, சுகாதார முறைக்கேற்ப அமைப்பது தவிர, அங்கு அழகுணர்ச்சிக்கும், தனித்தன்மைக்கும் இடம் தர வேண்டும். இது இப்போது கவனிக்கப்படுவதேயில்லையெனலாம். மேலும் தங்கள் தங்கள் வீடுகளை நிறுவுவதில், குடும்பத்தினர் எல்லோரும் மகிழ்ச்சியுடன் சேர்ந்து உழைக்கும் பான்மையை வளர்க்க வேண்டும். அண்டை அயலாருக்கு உதவும் பண்பையும் போற்ற வேண்டும். வீட்டைச் சுற்றிலும் பயனுடைய செடி கொடிகளைப் பயிரிடச் செய்ய வேண்டும்.

வீடுகளை எளிய முறையில், அழகுணர்ச்சியுடனும் பொறுப்புடனும், திறமையுடனும் அமைத்தால், மக்களின் வாழ்க்கை இனிதாகும் என்பதில் ஐயமில்லை. நல்மனம் உண்டானால், இது சாத்தியமாகும். மேலும், செல்வம் படைத்தவர்களும் கிராமங்களில் இம்முறையில் வீடுகளை அமைத்துக் கொண்டு, மற்றவர்களுடன் கூடி வாழ்ந்தால், நற்பண்பும், அமைதியும் ஓங்கும் என்று கூறலாம். நகரங்களில் இல்லாவிடினும், கிராமங்களில் பொது மக்களுக்கான குடியிருப்பு மனைகளை அரசாங்கம் எளிதில் பெறலாம். அல்லது ஆக்கலாம்.

---

## ராஜஸ்தான் மாநில ஆய்வுக் குழுவின் சென்னை வருகை

ராஜஸ்தான் மாநில ஆய்வுக்குழு ஒன்று, அம் மாநில, திட்ட அமைச்சர் திரு. மத்தூர் அவர்களின் தலைமையின்கீழ், சென்னைக்கு விஜயம் செய்தது. மாவட்ட நிர்வாகச் சீரமைப்புப் பற்றி, அதிகாரிகள் அதிகாரிகளல்லாதவர்களுடன், இக்குழு, பரிசிலனை செய்தது. இக்குழுவில், ராஜஸ்தான் வருவாய்த் துறை அமைச்சர் திரு கும்பாராம் ஆர்யா, பொது நிர்வாகத்துறை துணை அமைச்சர் திரு. பரசுராம் மொடர்னு, மற்றும் வருவாய்த்துறைக் கழக அங்கத்தினர் திரு. ஆர். என். மத்ஹோக், நிதித்துறை துணை செயலாளர் திரு. ஏ. வி. கணேசன், தொழில்துறை செயலாளர் திரு. டி. என். சதுர்வேதி மற்றும் கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் திரு. ராம்சிங் ஆகியோர் பங்கு கொண்டனர். திரு. ராம்சிங், இக்குழுவிற்குச் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

இக்குழுவினர் திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம், காஞ்சிபுரம் அருகிலுள்ள முத்தியால்பேட்டை, வில்லிவாக்கம், பூண்டி ஆகிய பஞ்சாயத்துக்களையும், பஞ்சாயத்து யூனியன்களையும் சென்று பார்த்தனர். இக்குழுவினர், நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இ. சி. பி. பிரபாகருடன் விரிவான பேச்சு வார்த்தை நடத்தினர். இக்குழுவின் அங்கத்தினர்கள் தமிழக தலைமைச் செயளாளர் திரு. டி. ஏ. வர்கீஸ் அவர்களை 23—8—1965 மாலை சந்தித்தனர். மேலும், இக்குழுவினர் உணவு, வருவாய்த்துறை அமைச்சர் திரு. வி. இராமையா அவர்களையும், துறைத்தலைவர்களையும், மற்றும் அரசாங்கச் செயலாளர்களையும் 24—8—1965 அன்று சந்தித்து, தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

இக்குழுவினர், சென்னையில் தங்கள் பணி முடிவுற்றதும், 25-ம் தேதி பெங்களூருக்குச் சென்றார்கள். பல்வேறு இடங்களிலும், அவர்கள், சமுதாய அபிவிருத்திப் பணிகள், பஞ்சாயத்து நிர்வாகம், கூட்டுறவு, சிறுசேமிப்பு, மதிய உணவுத் திட்டம், மகளிர் நலம், மற்றும் பஞ்சாயத்து ஆட்சியில் வரிகள் வசூலித்தல், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் ஆகியவை பற்றி, பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

(படம் : இரண்டாம் அட்டைப்பக்கம் பார்க்க)

---

"கண்ணைக்காக்கும் இமைபோல் நாட்டைக்
காப்பது நமது கடமையடா!"

# சுயதேவை பூர்த்தியடைந்த கிராமம்

கரே-கா-புர்வா. இது ஒரு கிராமத்தின் பெயர். அப்படி ஒரு கிராமம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் இருப்பது. அநேகம் பேருக்குத் தெரியாதுதான். ஏனெனில், அது ஒரு சின்னஞ் சிறிய கிராமம். ஆனால், கிராமப் புற இந்தியாவின் தோற்றத்தை மெல்ல மெல்ல மாற்றி வரும் அமைதியானதொரு புரட்சியில் பங்குகொள்ளும் ஆயிரங்கணக் கான கிராமங்களில், கரே-கா-புர் வாவும் ஒன்று. அவ்வூர் மக்க ளும், அவர்களது தலைவரும் எடுத்த உண்மையான முயற்சி களின் பலனாக, அந்தக் குக் கிராமம், சுயதேவை பூர்த்தி அடைந்திருக்கிறது.

கரே-கா-புர்வா எவ்வளவு சிறிய கிராமம்என்ப தற்கு, ஒரு செய்தியைச் சொன்னால் போதும். அங்கு விவசாய நிலங்கள் 56 ஏக்கர்களே உள்ளன. பஞ்சாயத்துத் தலைவரும், விவசாயிகளும் தக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டதனால், அந்த நிலங் களில் பெரும்பாலானவை நீர்ப்பாசன வசதி பெற் றிருக்கின்றன, இதற்கு அரசாங்க உதவி எதை யும் அவர்கள் கேட்கவில்லை. அவரவர் சொந்த ஏற்பாட்டைச் செய்துகொண்டனர். உழைப் புக்கு அஞ்சா இந்த விவசாயப் பெருமக்கள், களர் நிலமாக இருந்தவற்றில், ஐந்து ஏக்கர் பரப்பை விவசாயத்திற்குத் தகுதியாக மாற்றியமைத்துள்ள னர். இது அண்மையில் நடந்த ஒரு சாதனை.

### அனுபவத்தின் முதல் பாடம்

பஞ்சாயத்துத் தலைவரான திரு. ஜகந்நாத பிர சாத் ஒரு சிறந்த விவசாயி. அனுபவம், கூரிய கண்ணோட்டம் உள்ள அவர், விவசாய நடைமுறை களை அவசியத்திற்கேற்ப மாற்றி வருகிறார். அவர் அனுபவத்தில் முதல் பாடம், ஒவ்வொரு விவசாயி யும் தம் நிலத்திற்கு முதற்கண், சொந்த நீர்ப் பாசன ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். இதற்கு அவரே ஒரு வழிகாட்டியாக அமைந்தார் எனச் சொல்ல வேண்டும். ஏனெனில், அவர் ஓர் ஒழுங்கான கிணற்றை எடுத்து, அதில் புதிய பாசன முறைக்கும் ஏற்பாடு செய்துள்ளார். இதனால் கிடைத்த பலன்களைக் கண்டு, மற்றும் ஏழு விவ சாயிகள் அவரைப் போன்றே பாசன வசதி அமைத் துக்கொண்டனர். இவ்வாறு தீவிர விவசாய முறைகளைக் கையாண்ட அவர்களுக்கு ஆண்டு ஒன் றுக்கு உணவுத் தானியங்களும், காய்கறிகளுமாகச் சேர்ந்து ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 100 மணங்கு மாசூல் கிடைத்தது.

கோதுமை, உருளைக்கிழங்கு இரண்டையும் கலப் புப் பயிராகச் சாகுபடி செய்வதில் பஞ்சாயத்துத் தலைவர் திரு. ஜகன்னாத பிரசாத் இந்த ஆண்டு முதல் தகுதியைப் பெற்றார். அவரது கோதுமைப் பயிர் தனிச் சிறப்புடையதாக மிகுந்த தரத்துடன் விளங்குவதாகப் பலரும் பாராட்டினர். சலியா உழைப்பு, போதிய தழை உரம் போட்டது, குறிப் பிட்ட அளவு முறைகளின்படி ரசாயன உரங்களை உபயோகித்தது ஆகியவற்றின் காரணமாக, இந்தச் சாதனை சாத்தியமாயிற்று.

### தலைவர் பாதையில்

அவர்—தலைவர்—நடக்கும் பாதையில், மற்றவர் களும்பின்தொடர்ந்தபடி உள்ளனர். இந்த ஆண்டும் ஒன்பது விவசாயிகள், கட்டிட அமைப்போடுகூடிய கிணறுகள் கட்டி, அவற்றில் நவீன பாசன முறை களைப் பொருத்தியுள்ளனர். இக்கிணறுகள் வெட்ட வோ, பாசன இயந்திர அமைப்புக்கோ இவர்

[14-ம் பக்கம் பார்க்கவும்.]

மத்தியப் பிரதேசத்தில் ரெய்பூரிலிருந்து ஏழு கல் தொலைவில் தார்சிவா என்ற வட்டாரத்தில் உள்ள கச்சனு என்ற குக்கிராமம், ஒற்றுமையோடும், தகுந்த தலைமையின் கீழும், தன் கையே தனக்குதவி என்ற குறிக்கோளாடு அயராது உழைத்த காரணத்தால், மிகக் குறுகிய காலத்திலேயே வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ளது.

# இதோ இன்னொரு கிராமம்

# சுயமுயற்சியால் முன்னேற்றம்

தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து தங்கள் தேவைகளையும், குறைகளையும் தீர்த்துக் கொள்ள எப்போதும் சுறுசுறுப்பாக வேலை செய்ய அக்கிராம மக்கள் தயங்குவதில்லை. சென்ற ஆண்டு ஒரு சிறு நீரோடையின் குறுக்கே, மண் அணை கட்டி எல்லோருடைய பாராட்டையும் பெற்றனர். இதனை சிரம தானம் மூலம் அம்மக்கள் இரண்டே நாட்களில் கட்டி முடித்தனர். ஆண்களும் பெண்களுமாக சுமார் 800-க்கும் மேற்பட்ட மக்கள் தங்களுக்கு மிக முக்கியமான இந்த அணையை தாங்களாகவே முன்வந்து கட்டிக்கொண்டனர். இந்த அணையைக் கட்டி முடித்திருப்பது. அக்கிராம மக்களின் மூன்றாவது முயற்சியாகும். 1960-ல் இவ்வணையைக் கட்டி பாசனத்திற்கு வசதி செய்தனர். ஆனால், பலத்த மழையின் காரணமாக, அது உடைந்துவிட்டது. மறுபடியும் 1963-ல் முயற்சி செய்தனர். ஆனால் கட்டி முடிக்க இயலவில்லை. அயராத உழைப்பிற்குப் பெயர்போன அம்மக்களின் மூன்றாவது முயற்சி 1964-ல் வெற்றிபெற்றது. இப்போது இந்த அணையை சிரமதானத்தின் மூலம் மேலும் மேலும் பெரியதாக உயர்த்தி நீர்ப்பாசனத்திற்கு வசதியாக அதில் மதகுகள் கட்டவும் முனைந்துள்ளனர். ஏறக்குறைய ரூபாய் 6,000 செலவு செய்து கட்ட வேண்டிய இந்த அணையை கச்சனு கிராம மக்கள் தங்கள் சிரமதானத்தின் மூலம் செலவின்றியே கட்டிக்கொண்டனர். இந்தப் பணம் அவர்களுக்கு இப்போது மீதியல்லவா ?

இந்த அணை நீர்ப்பாசனத் தேவையை மட்டும் பூர்த்தி செய்யவில்லை. கரும்பு, காய்கறி முதலியன புதிதாகப் பயிரிடவும் உதவுகிறது. மேலும் முன்பெல்லாம் நஞ்சை பயிர் செய்ய முடியாத நிலங்களிலெல்லாம் இப்போது நெல் சாகுபடி செய்கின்றனர்.

### 1,850 மக்களுக்கு 1,854 ஏக்கர்

சுமார் 1,850 மக்கள் கொண்ட இந்த முற்போக்குக் கிராமம் 1,854 ஏக்கர் நிலங்கொண்டது. இதில் சுமார் 1,400 ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது. பெரும்பாலான நிலம் ஓடை நீர்ப்பாசனம் பெறுவது. இது போக, அவ்வூரில் உள்ள ஒன்பது சிறு சிறு நீர்த் தேக்கங்களும் பாசனத்திற்குப் பயன்படுகின்றன.

சிரமதானத்தின் மூலம், அக்கிராம மக்கள் இந்த அணையை மட்டும் கட்டிக்கொள்ளவில்லை. தங்களுக்கு மிக அத்தியாவசியமான ஐந்து மைல் நீளமுள்ள ஒரு சாலையைச் செப்பனிட்டுக்கொண்டனர். மற்றும் கலப்பு உரக் குழிகள், ஐந்து தோண்டி பராமரித்து வருகின்றனர்.

மற்றொரு வகையிலும், இந்த கிராமம் நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்துவிட்டது. சமீபத்தில் பஞ்சாயத்துத் தேர்தல் அக்கிராம மக்களின்

[14-ம் பக்கம் பார்க்க.]

# வறுமைப் பேயை விரட்ட வலிய ஆயுதம்

இரும்புக் கம்பிகளால் சமைக்கப்பட்ட பெரிய கதவுகள் திறக்கின்றன. வயதின் முதிர்ச்சியால் சுருக்கங்கள் விழுந்த, ஆனால் ஒளியுமிழும் கண்களோடு கூடிய முகம் மலர, அங்கு ஓர் உருவம் புன் முறுவலோடு தோன்றுகிறது. அந்த இனிய வரவேற்புடன் நாம் உள்ளே செல்கிறோம். அது, உத்திரப் பிரதேச மாநிலம், பஸ்தி மாவட்டத்தைச் சேர்ந்த மெஹத்வால் வட்டாரத்தின் அபிவிருத்திக் காலனி.

பஸ்தி மாவட்டம் வறுமைக்குப் பெயர் பெற்றது. நம் நாட்டிலேயே மிக அதிகமான கிராமாந்திர மக்கள் தொகை நெருக்கமும், மிகக் குறைவான சராசரி நபர் வருமானமும் கொண்ட மாவட்டம், பஸ்தி மாவட்டம் தான்.

வரவேற்பு தந்த அந்த முதியவர், பஞ்சாயத்துத் தொழில் திட்டத் தலைவர் திரு. மஹிப் நாராயன் மிஸ்ராவுக்கு வணக்கம் செலுத்துகிறோம். பதில் வணக்கம் செய்யும் அவர், தம் அடக்கப் பண்பைவெளிப்படுத்துகிறார்.

தொழில் காலனியை அவர், நமக்குக் காட்டுகிறார். விவசாயக் கருவிகள், தொழிற்சாலை, பித்தான் தயாரிப்புச்சாலை, சாக்கடை, குளியல் அறை சம்பந்தப்பட்ட குழாய்கள் முதலிய பொருட்களை செய்யும் தொழிற்சாலை முதலியவை வரிசையாக அமைந்திருக்கின்றன. இவற்றிற்கு மத்தியில், இந்த உற்பத்திப் பொருட்களைக் காட்சிக்கு வைக்கும் அழகிய அறை ஒன்று. அங்கிருந்தபடி, சுற்றிலும் எழும் இன்ப நாதத்தைக் கேட்கலாம்— இழைத்தல், செதுக்கல், கடைதல், தட்டுதல், அடித்தல் ஆகிய பல் வினைகளும் சேர்ந்து பற்பல ஒலிகளை எழுப்புகின்றன. வறுமை மிகுந்த ஒரு பகுதியில் தொழில் வளமும், அதன் வழி செல்வ வளமும் முகிழ்த்து வருவதைப் பறைசாற்றும் இந்த மகிழ்ச்சி கலந்த வியப்பில் ஆழ்ந்திருக்கும் நம்மை, வேறு இடத்திற்கு அழைத்துச் செல்கிறார், தலைவர் திரு மிஸ்ரா. அங்கு பொலிவிழந்து கிடக்கும் ஒரு ஓலைக் குடிசையைக் காட்டி, அங்குதான் பஞ்சாயத்து தொழில் திட்டம் 1962 அக்டோபர் 2-ல் ஆரம்பமானதாகக் கூறுகிறார். அப்போது அங்கு மூன்று நான்கு பேர்களே வேலை செய்தனர். இப்போது அந்த இடம், தொழில் பேட்டை துவக்கத்தின் ஒரு நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. வறுமையை எதிர்த்துப் போராடி வெற்றிக்கு வழிகோலிய கதையை, அது கூறுநிற்கிறது.

தலைவர் திரு. மிஸ்ரா, மீண்டும் பேசுகிறார் "இவற்றையெல்லாம் நாங்கள் செய்கிறோம். நகரத்து வசதிகள் எல்லாம் இங்கேயே கிடைக்கச் செய்ய வேண்டும். வேலை நாடி நகரங்களுக்கு ஓடும் படித்த இளைஞர்களை, கிராமத்திலேயே தங்கச் செய்ய வேண்டும் என்பதே எங்கள் அவா".

ஆர்வம் ததும்பும் இப் பேச்சைக் கேட்டபடி, அந்தப் பழைய குடிசையை நோக்கினால் ஏதோ புதை பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புடைய புராதனப் பொருள் போலத் தோற்றமளிக்கிறது. அது மட்டுமா, ஏழ்மையிலிருந்து மீட்சி பெற, அக்கிராம மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் சின்னமாகவும் அது திகழ்கிறது. ஆக, கடந்த கால நிலைமைகளின் தடயங்களும், உருவாகி வரும் எதிர்காலத்தின் முன் அறிகுறிகளும் அங்கு ஒரு சேரக் காட்சியளிக்கின்றன.

இந்த நிலைமைகளை நன்கு உணர்ந்த பஞ்சாயத்துத் தொழில் திட்டத் தலைவர், நம்பிக்கையுடனும் நிதானத்துடனும் இருக்கிறார். "நாங்கள் அதிகமாகச் சாதித்துவிட்டதாகச் சொல்லவில்லை. கிராமத்தில் தண்ணீர், மின்சாரம், சுகாதார வசதிகள் இல்லாவிட்டால் படித்தவர்கள் எவரும் இங்கு வசிக்க விரும்ப மாட்டார்கள். இவற்றையெல்லாம் பஞ்சாயத்துதான் செய்தாக வேண்டும். பல தடங்கல்கள் இருக்கலாம். ஆனால் ஓர் ஊரில் இருக்க வேண்டிய இந்த அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டியது அத்தியாவசியமாகும். கிராமப்புற மக்கள் வரவர நவீன வசதிகளை யறிந்து அவற்றை விரும்புகின்றனர். நல்ல சாலைகள், சாக்கடை வசதிகள் போன்றவற்றை அவர்கள் கோருவதிலிருந்தே இதைத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு நவீன வாழ்வு வாழ மக்கள் அவாவுறுகின்றனர். வாழ்க்கைத்தரம் உயர, வருமானம் அதிகரிக்க வேண்டும். கிராமப் புறங்களில்

தொழில்களைப் பெருக்குவதன் மூலந்தான் கிராம மக்களின் வருமானம் உயர முடியும் என்று திரு. மிஸ்ரா கூறுகிறார்.

இந்தப் பஞ்சாயத்துத் தொழில் திட்டம் 1962 அக்டோபர் 2-ம் தேதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கு 22 கிராமப் பஞ்சாயத்துக்கள், தலா ரூ. 100 நன்கொடை அளித்தன. ஆக, இதன் ஆரம்ப மூலதனம் ரூ. 2,200 தான். முதலில் சாக்கடை, குளியலறைக் குழாய்ச் சாமான்கள் செய்யப்பட்டன. பிறகு, பித்தான்கள் செய்யும் தொழிற்சாலை ஆரம்பமாகியது. பித்தானுக்குத் தேவையான கச்சாப் பொருள் இந்த வட்டாரத்தில் ஏராளமாகக் கிடைக்கிறது.

முதல் ஆண்டில், ரூ. 7,500 மதிப்புள்ள உற்பத்திச் சாமான்கள் விற்பனை செய்யப்பட்டு, ரூ. 3,000 லாபம் கிடைத்தது. அடுத்த ஆண்டு கிணறுகளுக்கான சிமெண்ட் வட்டங்கள் முதலியவை செய்து மொத்தம் ரூ. 30,000 அளவுக்குப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பிறகு மேலும் இரு பிரிவுகள்—விவசாயக் கருவிகள் செய்யும் பகுதி, சனப்புநார், ஜமக்காளங்கள் நெய்யும் பகுதி—தொடங்கப்பட்டன. எனவே இந்த மூன்றுண்டுகளில், இந்தத் தொழில் காலனியில் ரூ. 70,000-க்கு மேற்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு இதுவரை ரூ. 50,000 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

இருபத்து இரண்டு சிறு பஞ்சாயத்துக்கள் ஒன்று சேர்ந்து ரூ. 2,200 சொற்ப மூலதனத்துடன் ஒரு தொழில் திட்டத்தை தொடங்கி, இந்த மூன்றுண்டுகளுக்குள் ரூ. 50,000 மதிப்புள்ள பொருட்களை விற்று முதல் செய்திருக்கிறதென்றால், இந்த உதாரணத்தை நாட்டில் உள்ள மற்ற பஞ்சாயத்துக்களும் பின்பற்ற வேண்டுமல்லவா? பல பஞ்சாயத்துக்களுக்கு இன்று இருந்து வரும் நிதிப் பற்றுக் குறைக்கு, இத்தகைய ஏற்பாடு பெரிதும் நிவாரணமாக அமையும்.

கிராமப்புறங்களில் விவசாயத்துடன் தொழில்களும் வளர்ந்து ஒன்றுக்கொன்று அனுசரணையாக இரண்டும் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் தொழில் திட்டங்கள் உத்திரப் பிரதேச மாநிலத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டம், வறுமை என்ற பேயை விரட்ட கிராம வாசிக்குக் கிடைக்கும் அரிய வலிய ஆயுதம். அதை நாடெங்கும் உள்ள கிராம மக்கள் நன்கு பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

[11-ம் பக்கம் தொடர்ச்சி.]

களில் ஒருவர்கூட அரசாங்க உதவி, கடனுக்கு மனுச் செய்யவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எனவே கரே-கா-புர்வா மக்கள் தங்கள் சுய பலத்தில், முயற்சியில் அபார நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகிறது.

இந்தக் கிராமத்தில், பல அம்சங்களும் நன்கு பொருந்திய ஆரம்பப் பள்ளி ஒன்று இருக்கிறது. இது பற்றி உள்ளூர் மக்கள் பெருமைப்படுவதில் நியாயம் இருக்கிறது. ஏனெனில், அதை நிர்மாணிப்பதற்கு அவர்கள் தாராள நன்கொடை வழங்கினர்.

சரியான தலைமை, உறுதி, நீடித்த உழைப்பு, திருந்திய விவசாய முறைகளைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றின்மூலம், செல்வ வளத்தை, சுயதேவை பூர்த்தி இலட்சியத்தை நோக்கிச் செல்ல முடியும் என்பதற்கு, குறைந்த நிலமும், நிறைந்த முயற்சியும் கொண்ட இக்கிராம மக்கள், தக்க எடுத்துக் காட்டாய் விளங்குகின்றனர்.

---

[12-ம் பக்கத் தொடர்ச்சி.]

ஒற்றுமையை தெற்றென விளக்குகிறது. எல்லா அங்கத்தினர்களுமே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### சிறந்த தலைமை : சீரிய முன்னேற்றம்

திரு. தலுராம சாகு போன்ற ஒருவரை தலைவராகப் பெற்றிருக்கும் அக் கிராம மக்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள் தான். அவரே அந்த ஊர் கிராம சபையின் தலைவரும் ஆவார். அவர் ஒரு முற்போக்கு விவசாயி ஆகவும் விளங்குகிறார். அவ்வூர் மக்கள் ஒரு மனதாகத் தீவிர சாகுபடித் திட்டத்தில் இரண்டாவது கட்டத்தை அடுத்து வரும் பருவ காலத்திலேயே செயல்படுத்த முனைந்துள்ளார். இது அவ்வூர் விவசாய உற்பத்தியை மேலும் அதிகரிக்க உதவும் என்பது உறுதி.

அந்த ஊர் இன்னும் பல வகைகளிலும் முற்போக்காக விளங்குகிறது. விதை சேமிப்பு நிலையம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 160 மணங்கு நெல் வழங்க, விவசாயிகள் வாக்களித்துள்ளனர். இதன் பலனாக, தேவையுள்ள விவசாயிகளுக்குக் காலத்தில் விதை நெல் கொடுத்துதவ முடியும். இவ்வாறு, கச்சனா கிராம மக்கள், தங்கள் சுய முயற்சியின் மூலம் விவசாயத்திலும் இதர துறைகளிலும் துரித முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

" ஒரு புல் முளைத்த இடத்தில் இரண்டு புல். ஒரு மணி கிடைத்த இடத்தில் இன்று இரண்டு மணி நெல் விளைவிக்கிறவர் எவரோ, அவரே, நாட்டுக்கு அத்தியாவசியப் பணி புரிபவர்; எல்லா அரசியல் வாதிகளின் மொத்த சேவையைக் காட்டிலும் சிறப்பான சேவை செய்பவர் ஆவார்" என்று மேல் நாட்டு அறிஞர் ஜொனுதன் ஸ்விப்ட் கூறினுர்.

# ஓர் அடி நடந்தாலும் அதுவும் முன்னேற்றமே

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த கச்சார் மாவட்டத்திற்கு, **1963** ஜனவரி 26-ம் தேதி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். அது குடியரசு தினம் என்பதால் அல்ல; அன்றுதான் இந்த மாவட்டத்தில் தீவிர விவசாயத் திட்டம் அமுல் செய்யப்பட்டது. குறைவிலிருந்து நிறைவு, பழமையிலிருந்து புதுமை, பாரம்பரிய பழக்கத்திலிருந்து விஞ்ஞான முறைகள் என்ற மாறுதல்களை ஏற்படுத்த, விவசாயத்துறையில் திருந்திய நவீன முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்வதே இத்திட்டம்.

தீவிர விவசாயத் திட்டம், கச்சார் மாவட்டத்திற்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இதுவரை அற்புதங்கள் விளைந்ததாகச் சொல்ல முடியாதுதான். ஆனுல், இந்தத் திட்டம் மட்டும் என்ன—மாயா ஜாலங்களைச் செய்யும் மந்திரக் கோல் அல்ல. அதோடு, கச்சார் மாவட்டத்திற்கெனச் சில தனிப் பிரச்சினைகளும் இருக்கின்றன.

இத்திட்ட அமுலில் முதல் கட்டமாக சோனை, லட்சுமிபூர், ராமகிருஷ்ணநகர் லாவா ஆகிய நான்கு வட்டாரங்களில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு மேலும் நான்கு வட்டாரங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. திட்டம் தொடங்கிய மூன்றுண்டு காலத்திற்குள், மாவட்டம் முழுவதிலும் திட்டம் அமுலாகிவிடும். இவ்வாறு கூறுவதால், இந்த எட்டு வட்டாரங்களைத் தவிர்த்த, மாவட்டத்தின் இதர வட்டாரங்களில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஏதும் நடை பெறவில்லை என்று பொருள் அல்ல. தீவிர விவசாயத் திட்டத்தில் இன்னும் வராத இப்பகுதிகள் எல்லாம், இந்த இடைக்கால அவகாசத்தைப் பயன்படுத்தி, தீவிர முன்னேற்றத்திற்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

### பழமை மோகம்

விவசாயி என்பவர், இயல்பாக, பழமையில் ஊறியவராக இருக்கிறுர். அதிலும் கச்சார் மாவட்டத்தில் இந்த பழமைப் பிடிப்பு சற்று அதிகமாகவே இருக்கிறது. ஆகையால் நவீன விவசாய முறைகளின் பயனை இந்த விவசாயிகளுக்கு உணர்த்துவது மகா கடினமாக இருக்கிறது. எனினும் அவர்கள் படிப்படியாக பழைய முறைகளைக் கைவிட்டு புதிய முறைகளைப் பின்பற்றச் சம்மதிப்பது ஓர் ஆறுதலாகும். ஒரு படி கடப்பதும் முன்னேற்றம்தானே!

இந்த மாவட்டத்தில் போக்குவரத்துச் சாதனங்கள் மிகக் குறைவு. இதர மாவட்டங்களுடன் தொடர்பு கொள்வதற்கான சாலைகள் கூடச் சரிவர இல்லை. எனவே, மாவட்டத்தின் விவசாய—தொழில் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில், பாதக நிலைமை இருந்து வருகிறது.

### புதிய பாதை

தீவிர விவசாயத் திட்டம் அமுலாகி வரும் இந்தக் குறுகிய காலத்தில், **திட்டம்** தரும் பலனை மதிப்பிடுவது சரியல்ல. பருவ நிலைமைகள், விலைவாசி ஏற்றத்தாழ்வால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றிற்குத் தாக்குப்பிடித்து இத்திட்ட வேலை முன்னேற வேண்டியிருக்கிறது. திட்டம் சம்பந்தமான நிர்வாக அலுவல் முறைகளிலும், பல கட்டங்களாக, மாறுதல் செய்யப்பட்டு வருகிறது. திட்டத்திற்கு அனுசரணையாக உள்ள ஸ்தாபனங்கள் மண்சத்து, விதை பரிசோதனை நிலையங்கள், கருவிகள் உற்பத்திச் சாலை, மாவட்டத் தகவல் நிலையங்கள் முதலியவை இத்திட்டத்தில் தீவிர அக்கறை செலுத்திவருகின்றன. ஏனெனில் கச்சார் மாவட்டத்தின் பொருளாதாரத்தில் விவசாயமே பிரதான இடம் வகிக்கிறது. இன்னும் சொல்லப்போனுல், விவசாயத்தை விட்டால் வேறு வழியில்லை. வேறு துறைகளில் நல்ல வாய்ப்புக்கள் இல்லாததால், விவசாயம் தவிர்த்த வழிகளில் அந்த மாவட்டத்தின் செல்வ வளத்தைப் பெருக்க முடியாமல் இருக்கிறது. இவ்வாறு விவசாயத்தையே நம்பியுள்ள இந்த மாவட்டத்திற்குப் பெரிதும் வேண்டியது இந்தத் தீவிர விவசாயத் திட்டம். இதை நன்குணர்ந்து, கச்சார் மக்கள் தங்கள் பழங்கால முறைகளைக் கைவிட்டு புதிய பாதையில் முன்னேறி தங்கள் வாழ்வில் வளம் காண்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



G. N.—4-A.

# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்

## செங்கற்பட்டு மாவட்டம்

(படங்கள் : எதிர்ப் பக்கத்தில்)

**1. திரு டி.எல். ரகுபதி,** *தலைவர், பறங்கிமலை பஞ்சாயத்து யூனியன்.*

வயது 35. சொந்த ஊர் பல்லாவரம். எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ளார். பறங்கிமலை பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருமுறை போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். கௌரவ மாஜிஸ்டிரேட்டாக இருந்திருக்கிறார். சமூக சேவையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். பல்லாவரம் உயர்நிலைப் பள்ளிக் கமிட்டியின் உதவித் தலைவராகவும் பணியாற்றிவருகிறார். "பஞ்சாயத்துகளுக்குத் தேவையான அதிகாரங்களைக் கொடுத்தால், கிராமங்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முடியும்; இப்பொழுது உள்ள அதிகாரம் போதாது" என்பது இவர் கருத்து.

**2. திரு எஸ். தர்மலிங்கம்,** *தலைவா, மீஞ்சூர் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 31. விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எஸ்.எஸ். எல்.சி. வரை படித்துள்ளார். காட்டூர் பஞ்சாயத்துத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொன்னேரி கூட்டுறவு கிராம பாங்கி, பொன்னேரி தாலுகா கூட்டுறவு வர்த்தக சங்கம், பொன்னேரி தாலுகா கூட்டுறவு யூனியன் ஆகிய கூட்டுறவு நிறுவனங்களில் இயக்குனராக இருந்து வருகிறார். "மக்களுக்குக் குடிதண்ணீர், சுகாதாரம், சாலைவசதி, கல்வி வசதிகள் அளிக்கப்பெற்று, பஞ்சாயத்து ஆட்சியின் மூலம் கிராம மக்கள் அனைவரும் சுக வாழ்வு வாழ வேண்டும்" என்பது இவருடைய அவா.

**3. திரு பி. ஸ்ரீராமுலு,** *தலைவர், திருத்தணி பஞ்சாயத்து யூனியன்.*

வயது 32. இவரது தந்தையார், முன்னாள் சென்னை மாநில முதல் அமைச்சராக இருந்த, பி. முனுசாமி நாயுடு ஆவார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரை படித்திருக்கிறார். 1952-லிருந்து, வேலஞ்சேரி கிராமப் பஞ்சாயத்தின் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார். 1957-லிருந்து, இக்கிராம பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறார். திருத்தணி தாலூகா விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் உதவித் தலைவராக 1958-லிருந்து 1964 வரை, சேவை செய்துள்ளார். 1957-ல் இருந்து 1964 வரை திருத்தணி நில அடமான பாங்கியின் உதவித் தலைவர். இப்பொழுது அப்பாங்கின் பொக்கிஷதாரர். மக்கள் சேவை இவரது இலட்சியம்.

**4. திரு வி. கோபால் ரெட்டி,** *தலைவர், லத்தூர் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 42. பி.எஸ்.ஸி. பட்டதாரி. மதுராந்தகம் கூட்டுறவு ஆலையில் நிர்வாகக் குழுவில் இயக்குனராக, மூன்று ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மதுராந்தகம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் இயக்குனராகவும். மதுராந்தகம் நில அடமான பாங்கின் உப தலைவராகவும் பணியாற்றி வருகிறார். தொழில் விவசாயம்.

**5. திரு வி.சி. சம்பந்தம்,** *தலைவர், வாலாசாபாத பஞ்சாயத்து யூனியன்.*

வயது 33. சொந்த ஊர் காஞ்சிபுரத்திற்கு அருகே உள்ள வையாவூர் என்னும் கிராமம். பி.ஏ. வரை படித்துள்ளார். பட்டதாரியாயினும், இவரைக் கவர்ந்தது வேளாண்மைத் துறை தான். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நாட்டம் கொண்டவர். ஜனநாயக சோஷலிஸத்தில் அசையாத நம்பிக்கை உடையவர்.

**6. திரு பி. கோவிந்த ரெட்டி,** *தலைவர், சோழவரம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 42. சொந்த ஊர் பொன்னேரி தாலுகாவில் உள்ள நெற்குன்றம் என்ற கிராமம். தொழில் விவசாயம். நிலச்சுவான்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர். பூதூர் பஞ்சாயத்துக்குத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாயத்தில் நல்ல அனுபவமும் ஆர்வமும் உண்டு. பஞ்சாயத்து வேலையிலும் பொதுப்பணியிலும் ஆர்வம் கொண்டவர். தாய் மொழி தெலுங்கு என்றாலும், தமிழ் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்தவர். பஞ்சாயத்துக்கு தேவையான எல்லா வேலைகளையும் ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் செய்து முடித்திருக்கிறார்.

**7. திரு ஏ. கோவிந்தராஜன்,** *தலைவர், திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 45. சொந்த ஊர் சதுரங்கப்பட்டினம். 1959–ம் வருடம் முதல் சதுரங்கப்பட்டினம் பஞ்சாயத்துத் தலைவர். 1961–ல் திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன் உபதலைவர். இப்பொழுது, அப்பஞ்சாயத்து யூனியன் தலைவர். சமயத் தொண்டும் அரசியல் தொண்டும் தீவிரமாகச் செய்து வருகிறார். தன் கிராமத்தில் எல்லா வகையான பொறுப்புகளையும் மேற்கொண்டு, கிராம மக்களுக்குப் பக்க பலமாக நின்று தொண்டாற்றி வருகிறார்.

**8. திரு கே. ஆதிகேசவேலு,** *தலைவர், சித்தாமூர் பஞ்சாயத்து யூனியன்,*

வயது 42. போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இடைக்கழிநாடு பஞ்சாயத்துத் தலைவர். இப்பஞ்சாயத்தை சேர்ந்த கடப்பாக்கம் கிராமத்தில் தன் சொந்த நிதியைக் கொண்டே, ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவியுள்ளார். மாவட்ட நூலகக் குழுவில் 1954-லிருந்து தொடர்ந்து பதவி வகித்து வருகிறார். 1954-லிருந்து 1957 வரை செங்கற்பட்டு மாவட்ட கழக உறுப்பினர். தாழ்த்தப்பட்டோர் சமுதாய நலனுக்கு பாடுபடும் பண்பு மிகுந்தவர். இவருடைய தொண்டினால், இடைக்கழி நாடு பஞ்சாயத்துப் பகுதியில் பல்வேறு வசதிகள் பெருகியுள்ளன.

**9. திரு ம. ஜெயராமன்,** *தலைவர், ஆர்க்காடு பஞ்சாயதது யூனியன், வட ஆர்க்காடு மாவட்டம்.*

வயது 44. சொந்த ஊர் கீழ்குப்பம் கிராமம். விவசாயத்தில் இளமையிலிருந்தே தீவிரமாக உழைத்து வந்துள்ளார். 20 ஆண்டுகாலமாக பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளார். "கிராமங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்குதல், கல்வி பாதுகாப்பு ஆகிய பணிகளில் முதலிடம் அளிக்க வேண்டும்" என்பது இவருடைய கருத்தாகும்.

---

"பொய் யென்ற படைகொண்டு போர் நடத்தும்
புல்லார்க் கிங்கொரு நாளும் வெற்றியில்லை".

# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்

## செங்கற்பட்டு மாவட்டம்


(1)


(2)


(3)


(4)


(5)


(6)


(7)


(8)


(9)



## மதுரையில் விவசாயக் கல்லூரி துவக்க விழா

படம் 1: மதுரையில், 19—8—65-ல் விவசாயக் கல்லூரியை, முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் துவக்கி வைத்தார்.



படம் 2: கல்லூரியின் மாதிரித் தோற்றம்.



படம் 3: விவசாயக் கல்லூரி மாணவர் விடுதியின் அடிக்கல்லை, உணவு அமைச்சர் திரு வி. இராமையா நாட்டினர்.



படம் 4: மாணவர் விடுதியின் மாதிரித் தோற்றம்.





படம் 1: சிறு சேமிப்பு ஆலோசனைக் குழு, 26—8—65-ல், முதலமைச்சர் தலைமையில், சென்னையில் கூடியது.

**ஆசிரியருக்குப் பாராட்டு**

படம் 2: புதுக்கோட்டையைச் சேர்ந்த திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில், கடந்த 39 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி, அண்மையில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு வெங்கட்ராம அய்யரைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தப்பட்டது.

படம் 3: அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுப் பதிவாளர்கள் மகாநாட்டை, சமுதாய நல அமைச்சர் திரு எஸ். கே. டே அவர்கள் டெல்லியில் துவக்கி வைத்தார்.



# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்

## வட ஆர்க்காடு மாவட்டம்


(1)


(2)


(3)


(4)


(5)


(6)


(7)


(8)


(9)

## பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

[படங்கள் : எதிர்ப் பக்கத்தில்]

**திரு ஜி. நடராஜன்,** *தலைவர், காட்பாடி பஞ்சாயத்து யூனியன்.*

வயது 35. சொந்த ஊர் குடியாத்தம் தாலுகாவில் உள்ள சேனூர். பொதுவாழ்வில் 30 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர். 1952 முதல், பொது வாழ்வில் ஈடுபட்டுப் பணியாற்றி வருகிறார். மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, உணவு உற்பத்தியைப் பெருக்கவும், கிராமங்களில் பள்ளிக் கூடங்களை அதிகம் திறக்கவும் முயன்று வருகிறார். கிராமங்களை இணைக்கும் சாலை வசதிகளும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளும், வட்டார மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர். ''பஞ்சாயத்து ராஜ்யம், கிராமப்புற மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கம்'' என்பது இவர் கருத்து.

ஊ

**2. திரு க. இரா. செல்வமுர்த்தி,** *தலைவர், கணியம்பாடி பஞ்சாயத்து யூனியன்.*

வயது 47. சொந்த ஊர் கணியம்பாடி. 1957-லிருந்து கணியம்பாடி பஞ்சாயத்தின் தலைவராகத் தொடர்ந்து இருந்து வருகிறார். இன்டர்மீடியட் வரை படித்துள்ளார். கிராம அபிவிருத்தி வேலைகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். கணியம்பாடி கூட்டுறவு பால் விநியோக சமூகத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். கணியம்பாடி உயர் நிலைப் பள்ளிக்கட்டிடக் கமிட்டித் தலைவராகவும் ஆரம்பமுதல் இருந்து அப்பள்ளியின் முன்னேற்றத்திற்குச் சிறந்த தொண்டு புரிந்து வருகிறார்.

ஊ

**3. திரு ஆர். என. வீரபத்திரன்,** *தலைவர், ஆரணி பஞ்சாயத்து யூனியன்.*

1959-ல் இப் பஞ்சாயத்து யூனியனில் உள்ள இராட்டின மங்கலம் பஞ்சாயத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மறுபடியும் 1965-ல் அப்பஞ்சாயத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய கிராமத்தில், இவருடைய முயற்சியினால், பள்ளியில் படிக்கும் குழந்தைகள் அத்தனை பேருக்கும், சீருடை இனமாக வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகள் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை உள்ளவர். கிராமங்களில் சாலைவசதி, குடிதண்ணீர் வசதி, மனமகிழ் மன்றம் போன்ற வசதிகளைச் செய்திருக்கிறார்.

**4. திரு எஸ்.கே. சுப்பிரமணியம்,** *தலைவர், அரக்கோணம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 41. அரக்கோணம் நகரப் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாயத்திலும். கூட்டுறவு இயக்கத்திலும், மிகுந்த ஈடுபாடு உள்ளவர். தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்க இயக்குநர், வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கியின் இயக்குநர், அரக்கோணம் கூட்டுறவு நில அடமான பாங்கியின் பொக்கிஷதாரர், அரக்கோணம் தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்க இயக்குநர்; தக்கோலம் கூட்டுறவு விவசாய பாங்கி இயக்குநர்: வட ஆர்க்காடு மார்க்கட்டிங் கமிட்டி உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்து வருகிறார். எல்லாக் கிராமங்களுக்கும் முடிந்த அளவுக்கு எல்லா வசதிகளும் செய்து தர வேண்டுமென்பது இவர் இலட்சியம்.

ஊ

**5. திரு பெருமாள்சாமி நாயக்கர்** *தலைவர், வெம்பாக்கம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 47. சொந்த ஊர் செய்யாறு தாலுகாவில் உள்ள மாமண்டூர். சிறுவயதிலேயே வெளிநாடு சென்று தாய்நாட்டிற்கு திரும்பி வந்தவர். 30 வயதிலிருந்தே பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளார். ஜில்லா போர்டு உறுப்பினர் ஜில்லா நூல்நிலையக் கமிட்டி உறுப்பினராக இருந்துள்ளார். இரண்டு முறை 1959-லும் 1965-லும் வெம்பாக்கம் பஞ்சாயத்து யூனியன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிராம மக்களின் நல்வாழ்வுக்காக சலியாது உழைக்கும் ஆர்வம் கொண்டவர்.

ஊ

**6. திரு எம். பொனனுரங்கம்,** *தலைவர், சோளிஙகபுரம் பஞ்சாயத்து யூனியன.*

சொந்த ஊர் சோளிங்கபுரம். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சோளிங்கபுரம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் இவர். 1965–66-ல் சோளிங்கபுரம் நகர பஞ்சாயத்துக்கு போட்டின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுத் தொண்டு புரிவதில் நல்ல ஆர்வம் உடையவர்.

**7. திரு ஆ. நடேச கவுண்டர்,** *தலைவர், துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 40. திருவண்ணுமலை தாலுகாவில் உள்ள கோலூர் இவருடைய சொந்த ஊர். விவசாயக் குடும்பத்தில் பிறந்தார், பொதுநலப்பணிகளில் சிறந்த அனுபவம் பெற்றுள்ளார். நாடு விடுதலை பெற்ற பின்பு, வட்டாரத்தின் கிராமங்கள் சமுதாய நலத்திட்டத்தின் சேர்க்கப்பட்ட பொழுது கிராமத்தில் கிராம சேவா சங்கம் என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தினர். துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஊ

**8. திரு ஜே.ரங்கநாத முதலியார்** *தலைவர், செங்கம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 38. இன்டர்மீடியட் வரை படித்துள்ளார். 1952-ல் மின் தொழில் நுட்பக்கல்வி பயின்று டிப்ளமோ பட்டம் பெற்று கோயம்புத்தூர் பைகாரா மின்சாரத் துறையில் நான்காண்டுகள் பணியாற்றினர். பின்பு விவசாயத் துறையில் ஈடுபட்டார். ''எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, சாலை வசதி, ஆரம்பப்பள்ளி நிறுவ வேண்டும்'' என்பது இவர் இலட்சியமாகும்.

ஊ

**9. திரு எஸ். கந்தசாமி ரெட்டியார்,** *தலைவர், வேலூர் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 44. சொந்த ஊர் தென்னூர் கிராமம். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ளார். விவசாயக்குடும்பத்தில் பிறந்தவர், பஞ்சாயத்து வளர்ச்சிப்பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளார். இவருடைய முயற்சியால், ஊசூர் கிராமத்தில் போர்டு உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட்டது. வேலூர் பஞ்சாயத்து யூனியனுக்கு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். பஞ்சாயத்து வளர்ச்சி வேலைகள் நல்ல முறையில் நடைபெற்று கிராமங்கள் சீரும் சிறப்பும் பெற்று திகழ வேண்டுமென்பது இவர் இலட்சியம்.

# ஏழே நாட்களில் எழுந்த கட்டடம்



உத்தரப் பிரதேச மாநிலம், லட்சுமணபுரியை அடுத்து, நான்கு மைல் தூரத்தில், உள்ள சிகந்தர் பூர்கலான் என்ற கிராமம், அண்மையில் ஓர் அபார சாதனை மூலம் வரலாற்றுப் புகழ் எய்திவிட்டது.

அக்கிராமத்தில், சத்து உணவு நிலையம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டு இருந்தது. அதற்கான கட்டிடத்தை—விசாலமான நான்கு அறைகள் கொண்ட கட்டடத்தை — ஆர்வமுள்ள அவ்வூர் மக்கள் ஏழே நாட்களில் கட்டி முடித்தனர். ஊரில் வயது வந்தவர்கள் சுமார் 700 பேர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக சிரம தானம் அளித்ததால், இவ்வளவு குறுகிய காலத்தில் கட்டடத்தைக் கட்டி முடிக்க முடிந்தது.

சத்துணவுத் திட்டத்தின்படி, மத்திய அரசாங்கம், உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி, ஒத்துழைப்புடன், நாட்டிலுள்ள பல்வேறு வட்டாரங்களிலும் சத்துணவு நிலையங்களைத் துவக்கி வருகிறது. சத்துணவு என்பது என்னென்ன, அவற்றை எப்படித் தயாரித்து அதிக பலன் அடையலாம் என்பனவற்றையெல்லாம் கிராம மக்களுக்குச் சொல்லித் தருவதே, இந்த நிலையங்களின் நோக்கம். இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக கர்ப்ப ஸ்திரிகள், கைக் குழந்தையுடன் உள்ள பெண்கள், பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகள் ஆகியோர் சத்துணவு பெறும்படியாக வழி செய்யப்படுகிறது.

**வாய்ப்பை படைத்தனர்!**

சிகந்தர்பூர்கலான் சேர்ந்துள்ள சின்ஹாத் வட்டாரம் முழுவதற்கும் ஒரு சத்துணவு நிலையந்தான் ஏற்படுத்த முடிவாயிற்று. அந்த வாய்ப்பு, தங்கள் ஊருக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வம் கொண்ட சிகந்தர்பூர்கலான் மக்கள் தங்கள் சக்திகளை ஒன்று திரட்டினர். சிமெண்ட் உடனடியாகக் கிடைக்காதாகையால், சுண்ணாம்பைக் கொண்டே கட்டடத்தைக் கட்டி முடித்தனர்.

சின்ஹாத் வட்டாரம், இந்த நிலையம் நிறுவுவதற்கென ரூ. 3,000 மானியம் வழங்கியது. கிராமவாசிகள் தங்கள் பங்காக ரூ. 1,000 திரட்டினர். அதோடு இரண்டு ஏக்கர் நிலமும், கட்டடம் கட்டுவதற்கான உழைப்பையும் தானமாக அளித்தனர். பலன்—அவ்வளவு பெரிய கட்டடம் ஏழே நாட்களில் உருவாயிற்று. இன்று அது, ''தன் கையே தனக்கு உதவி'' என்ற கொள்கையை மெய்ப்பிக்கும் நிரந்தர சாசனமாகத் திகழ்கிறது.

ஆனால், இது ஒன்று தான் சிகந்தர்பூர்கலான் மக்களின் சாதனை என்பதல்ல. பல்வேறு துறைகளிலும் அவர்கள் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். அக் கிராமத்தின் பெண்களும் பின்தங்கி விடவில்லை. கல்வியறிவு பெறுதல், கைவினைத் தொழில்களில் பயிற்சி முதலியவற்றில் அவர்கள் விசேஷ அக்கறை காட்டி வருகிறார்கள். ஐந்து முதல் பதினைந்து வரை வயதுள்ள 30 பெண்கள், கிராமச் சிறுமிகள் சங்கத்தில், தீவிர உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவர்களன்றி, 35 மாதர்கள் ஏற்கனவே மாதர் நலப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தையல் நூலில் பின்னுதல் மற்றும் படங்கள் வரைதல் போன்றவற்றில் அவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர்.

**சிறுவர்கள் அளித்த சிரமதானம்!**

இன்று, அந்தக் கிராமமே புத்துயிருடன் சுறுசுறுப்பாகக் காணப்படுகிறது. தங்கள் சாதனை குறித்து, கிராமச் சிறுவர் சிறுமியர்கூடப் பெருமையடைகிறார்கள். சத்துணவு நிலையம் பற்றி பெருமிதத்துடன் குறிப்பிட்ட ஒரு ஏழாவது வகுப்பு மாணவன், தானும் கிராமத்தில் உள்ள இதர 50 பையன்களும், தினசரி 4 மணி நேரம் சிரமதானம் செய்து சத்துணவு நிலையக் கட்டடம் உருவாக்கத் துணை புரிந்ததாகச் சொன்னான். ''ஆனால் சுகாதாரம், துப்புரவு பற்றி எங்கள் சகோதரிக்கும், தாய்மார்களுக்கும் சொல்லித்தர வேண்டியது இன்னும் நிறைய இருக்கிறது'' என்றும் அவன் கூறினான்.

பஞ்சாயத்து உறுப்பினர் ஒருவர், ''ஏழே நாட்களில் முடித்து, அரும்பாடு பட்டதற்காக நாங்கள் கவலைப்படவில்லை. நிலையம் ஏற்பட்டதைப் பற்றிப் பெருமைப்படுகிறோம்'' என்றார்.

சிகந்தர்பூர்கலான் மக்கள் காட்டிய இந்த உன்னத பாதையை, நாட்டிலுள்ள மற்ற கிராமப்புற மக்களும் பின்பற்றுவார்களானால், சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தின் இறுதி இலட்சியத்தை விரைவில் எய்த முடியும்.

# இன்றைய சேவை நாளைய வரலாறு

**பன்னெடுங்காலமாக துயிலில் ஆழ்ந்திருந்த இந்திய கிராமங்கள் கண்திறந்து விழிப்புற்று வருகின்றன. சமுதாய அபிவிருத்தித் திட்டம், அதையொட்டி வந்த பஞ்சாயத்து ஆட்சி முறை, அதன் முக்கிய அம்சமாக அமைந்த ஜனநாயக அதிகாரப் பரவல் முறை, இவற்றின் பலனாக, நவ இந்தியாவை நிர்மாணிக்கும் மாபெரும் பணியில், கிராமப்புற மக்கள் தங்கள் பங்கை ஏற்கும் படி உந்தித் தள்ளப்பட்டு வருகின்றனர். அறியாமை, வறுமை, பசி ஆகிய கேடுகளில் இருந்து விடுபட்ட புதிய இந்தியாவை உருவாக்கும் உன்னத இலட்சியத்திற்கு இன்று பாடுபடும் ஒவ்வொருவருடைய பணியும், எதிர்கால வரலாற்றில் இடம் பெறத் தகுதியுடையதாகும். அத்தகைய தகுதியுள்ள ஓர் ஆசிரியரின் சிறப்பான பணியை விவரிக்கிறது இக்கட்டுரை.**

ராஜஸ்தான் மாநிலம். சஹும்பெர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சிறிய கிராமம், கரார். அங்கு பஞ்சாயத்து யூனியனால் நடத்தப்பெறும் ஓர் ஆரம்ப ஆதாரப்பள்ளி மட்டுமே இருக்கிறது. 1963-ம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் இப்பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார் பைரான் லால் விஜை வர்கியா. அவர் பணியாற்றத் தொடங்கிய ஓராண்டு காலத்திற்குள், பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்தியது மட்டுமல்ல, கிராமத்தில் வயது வந்தவர்களுக்கும் கல்வியில் ஆர்வம் ஊட்டினார்.

அவர் பள்ளியில் சேர்ந்த மூன்று மாதங்களுக்குள், கிராமத்தில் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்தார். பிறகு, தான் வேலை செய்யும் பள்ளியை உண்மையானதொரு ஆதாரப் பள்ளியாக அதற்குரிய இலக்கணம் எல்லாம் அமையப் பெற்றதாக அபிவிருத்தி செய்ய அவர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். மாணவர்களுக்கு பல வகையிலும் உற்சாகமூட்டும் ஒரு வற்றாத ஊற்றாக அவர் விளங்கினார். இந்த முறையில் அப்பள்ளி மாணவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் வேறு பல பள்ளி மாணவர்களை வெற்றி கண்டு, பரிசுகள் பெற்றனர்.

**மூன்று மாதத்தில் கல்வியறிவு**

குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதோடு, விஜைவர்கியா திருப்தியடைந்து விடவில்லை. படிப்பு அறிவு இல்லாத 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் பற்றி அவர் தகவல் சேகரித்ததில், அத்தகையவர்கள் 205 பேர் இருப்பது தெரியவந்தது. எனவே, அவர்களுக்காக முதியோர் கல்வி நிலையம் ஒன்றை அவர் ஆரம்பித்தார். அதில் முதலில் 21 பேர்களே சேர்ந்தனர். எனினும் அவரது இடைவிடா முயற்சியின் பலனாக, மொத்தமுள்ள 205 பேர்களில், 55 பேர் மூன்று மாதங்களில் எழுதப் படிக்கக் கற்றுக்

கொண்டனர். புத்தகத்தில் அழகாக அச்சடிக்கப்பட்ட சொற்களை, எழுத்துக் கூட்டி படிப்பதில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களும் ஆர்வம் காட்டினர்.

இந்த முதியோர் கல்வி நிலையம், ஒரு வகுப்பறையாக மட்டுமின்றி, கிராம மக்களுக்கு ஒரு பொழுது போக்கு மன்றமாகவும் இயங்கி வந்தது. ஆசிரியர் பைரான் லால், கரார் பஞ்சாயத்திடமிருந்து ஒரு வானொலிப் பெட்டியை வாங்கி வைத்தார். எனவே முதியோர்களுக்காக மாலை நேரத்தில் நடத்தப் பெறும் வகுப்புக்களின்போது அந்த முதியோர், மாணவர்கள் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு பிறகு அந்த நிகழ்ச்சிகளில் தாங்கள் கேட்டறிந்த தங்களுக்கு அக்கறையுள்ள விஷயங்கள் பற்றி ஒருவருக்கொருவர் விவாதித்துப் பலன் அடைந்தனர். வயல்களில் பாடுபட்டு, களைப்புடன் மாலையில் வீடு திரும்பும் விவசாயிகளின் பொழுது போக்குக்காக வேறு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. முறையான இசைக் கருவிகளுடன் பஜனை, கிராமியப் பாடல்களைப் பாடுவது அன்றாட வாடிக்கையாக இருந்து வருகிறது.

பொது அறிவு பரவ....

கிராம மக்கள் நாட்டு நடப்பையும், சர்வதேச நிலைமைகளையும் அறிந்து கொள்ள வசதியாக, பஸ் நிலையத்தில் உள்ள அறிவிப்புப் பலகையொன்றில், அன்றாட முக்கிய செய்திகளைக் குறிப்பிடும் பணியை, திரு பைரான்லால் செய்து வருகிறார். அவர் நடத்தும் முதியோர் கல்வி நிலையம் வெற்றிகரமாக நடைபெறுவதைக் கண்டு, அந்த யூனியனைச் சேர்ந்த வேறு பல கிராம பள்ளிகளும் முதியோர் கல்வியில் நாட்டம் கொள்ளத் தொடங்கின.

தனிப்பட்ட ஓர் ஆசிரியர், சிறப்பாகச் செய்த பெரிய சாதனை அது. அதைத் திறம்படச் செய்த திரு. பைரான்லால் விஜை வர்கியாவுக்கு, முதற் பரிசாக ரூ. 300 ரொக்கம், மாவாலி பஞ்சாயத்து யூனியனால் வழங்கப்பட்டது.

இந்தப் பரிசோதனை தந்த வெற்றியின் பயனாக, சலும்பெர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 36 ஆரம்பப் பள்ளிகளில் முதியோர் கல்விக்கான இரவு வகுப்புகள் நடத்தப்பட்டன. மொத்தம் 654 பேர் வகுப்புகளில் சேர்ந்தனர். இவர்களில் 510 முதியவர்கள் பரீட்சை எழுதியதில் 410 பேர் தேர்வு பெற்றனர்.

நவ பாரதத்தை உருவாக்க அரும் பணியாற்றியவர்களில் ஒருவர் என்ற தகுதி திரு விஜைவர்கியாவுக்கு உண்டு. நாட்டின் எதிர்கால வரலாற்றில் இத்தகையவர்களது பெயர் நிச்சயம் இடம் பெறும்.

---

## விவசாய வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்களின் பெரும் பங்கு

"நாட்டில் நிலவும் இப்போதைய உணவு நிலைமையானது, நேர்மை, நெறியற்ற தனியார் வர்த்தகர்களின் ஏகபோகப் போக்கை உடைத்தெறியக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்லதொரு வாய்ப்பை அளித்திருக்கிறது" என்று யூனியன் சமுதாய நல வளர்ச்சி கூட்டுறவு அமைச்சர் திரு எஸ். கே. டே புது டெல்லியில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பிரதம நிர்வாக அதிகாரிகள், விற்பனைத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் கூட்டுறவு கூட்டுப் பதிவாளர்கள் ஆகியோரின் மகாநாட்டில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

விவசாயப் பண்டங்களின் விலைகளை ஸ்திரப்படுத்தும்பொருட்டு கூட்டுறவு விற்பனையுடனும், விற்பனை ஏற்பாடு, பொருள் பக்குவ ஏற்பாட்டுடனும், பொருள் பக்குவ ஏற்பாடு, உபயோகிப்போரின் நடவடிக்கைகளுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார். விவசாயிகளின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் பூர்த்தி செய்து வைக்கவேண்டும். கூட்டுறவு விற்பனை ஸ்தாபனங்கள் அதிகபட்ச அனுகூலத்தை அடைவதற்கு வசதியாக இருக்கக் கூடியபடி உற்பத்தியாளர்களுடனும், உபயோகிப்போருடனும் நேரடித் தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை:

பக்கங்கள்—11, 12, 13, 14, 15, 22, 23, 24 (8 பக்கங்கள்)

**Articles reproduced from "Panchayati Raj" on Pages 11, 12, 13, 14, 15, 22, 23 and 24 (8 pages).**

# எல்லையில் நாம்

◁ திரு சோம. மகாதேவன் ▷

(காட்சி 5)—சென்ற இதழ் தொடர்ச்சி.

முத்தம்மா,—எல்லாம் கட்டியாச்சு. அந்தப் பணம் சேரவேண்டிய இடத்திலே சேர்ந்துப்போச்சு!

மருத.—நீயே கொடுத்திட்டியா? உனக்கு ஏதுக்கு இந்தத் தலைப்பிறட்டு?

முத்தம்மா.—நடந்ததைத்தான் கேளுமே. கோழிக பூராவும் பதினெட்டு ரூபாய்க்குத்தான் வித்திச்சு. கூடையை தூக்கிக்கிட்டு வந்தேன். சந்தைக்குப் பக்கத்திலே பொம்பளைப் பிள்ளைங்க படிக்கிற பள்ளிக்கூடம் இருக்குது பாரு....அதிலே....

மருத.—(இடைமறித்து) அதிலே பொடலங்கா கட்டித் தொங்குச்சாக்கும்! என்ன புள்ளே கதைவிடுறே!

முத்தம்மா.—உனக்குப் பொடலங்கா மேலேயும், பூசணிக்காய் மேலேயும்தான் நினைவிருக்கும். கேளு மச்சான்! அந்த பள்ளிக்கூடத்திலே இன்னிக்கு யுத்த நிதி வாங்குறதுக்காக பெரிய மந்திரி வந்திருந்தாரு. எங்கே பார்த்தாலும் ஏகப்பட்ட கூட்டம். அந்த மந்திரி எவ்வளவு உருக்கமாப் பேசினரு தெரியுமா? நம்ம நாட்டைக் காப்பாத்துறதுக்கு இமயமலை எல்லையிலே நம்ம வீரர்கள்.... பனியிலேயும், மழையிலேயும் நின்னு நமக்காகச் சண்டை போடுறுங்க. அவங்களுக்குப் பக்கபலமா நிக்க வேண்டியது நம்ம கடமை இல்லையான்னு கேட்டாரு.

மருத.—இதைக் கேட்டுட்டு....நீயும் கூட்டத்தோட கூட்டமா மயங்கிப்போயி நின்னுட்டியாக்கும்.

முத்தம்மா.—எல்லாரும்தான் நின்னுங்க. பேராசைக்காரங்களை விரட்டுறதுக்கு நம்ம சிப்பாய்களுக்கு எல்லா வசதியும் செய்யிறதுக்கு நிறைய பணம் வேணும். இந்த மண்ணிலே பிறந்தவங்க எல்லாரும் உங்களாலே முடிஞ்சதைக் கொடுங்கன்னு சொல்லி அந்தமந்திரி கையை நீட்டினரு பாரு......மச்சான்! அடியாத்தே அத்தனை பெண்களும் கையிலே காதுலே இருக்கிறதைக் கழட்டிக் கொடுத்ததைப் பாக்கணுமே,

மருத.—இருக்கிறவங்க கொடுப்பாங்க........நீ எதுக்கு அங்கே போயி நிக்கணும்.

முத்தம்மா.—(உணர்ச்சிப்பெருக்கோடு) இல்லாதவங்களுக்கு உணர்ச்சியே இல்லாமப்போகுமா.. மச்சான்......அப்ப நிசமாவே....பட்டாளத்திலே இருக்கிற எங்கண்ணன் நினைப்பு வந்திரிச்சு எனக்கு. அப்படியே அழுதிட்டேன். அந்த சமயத்திலே பாத்து மந்திரி எனக்குப் பக்கத்திலே வந்து நின்னு—எங்கிட்டேயும் கையை நீட்டினரு. எனக்கு காலும் ஓடலே கையும் ஓடல்லே. அப்புறம்தான் கோழி வித்த பணம் கையிலே இருந்தது...... நினைவுக்கு வந்திச்சு! அதை அப்படியே அவரு கையிலே தூக்கிக் கொடுத்துட்டேன். அப்ப எவ்வளவு சந்தோஷமா இருந்திச்சு தெரியுமா?

மருத.—(வெறியோடு) அடி சக்கைன்னுனும்! இதுக்குத்தான் இவ்வளவு தூரத்துக்கு சுத்தி வளைச்சு வந்தியா?

முத்தம்மா—(கனிவாக) கோவிச்சுக்காதே மச்சான், நாம பட்டினிகடந்தாலும் பரவாயில்லை. என் கையாலே அந்தப் பணத்தைக் கொடுத்தது மனசுக்கு எவ்வளவு நிறைஞ்சு இருக்குது தெரியுமா?

மருத—(ஆத்திரத்தோடு) இருக்கும்......இருக்கும், கோடி கோடியா வச்சிருக்கிறவனுக எல்லாம் இரும்புப் பெட்டியைச் சுத்திக்கிட்டே வாரான். திறக்க மாட்டேங்கிறுன்! இந்த சீமான்மக—முந்தியிலே முடிஞ்சு வச்சிருந்ததைப் பொக்குன்னு அவுத்துக் கொடுத்திட்டாளாம்.

முத்தம்மா.—நீ சீட்டு விளையாண்டு ஒரு வருஷத்திலே எவ்வளவு பணத்தைத் தொலைக்கிறே, அதுக்கு இது ஒன்னும் கெட்டது இல்லே!

மருத.—அப்படிச் சொல்லடி சிங்கக்குட்டி. பட்டாளத்தான் பெத்த மகனல்ல! எங்கே போகும் வீரம், அப்படியே பொங்கித் தட்டியிருக்கு! உனக்கு எதுக்கடி இந்தப் பெரியதனமெல்லாம். கழுதை நினைச்சதாம் கந்தலும் கலக்கலுமா? இப்ப பணத்துக்கு என்ன செய்யறது?

முத்தம்மா.—இந்தா—எதுக்கு இப்ப ஏழு வீடு கேட்குறமாதிரி சத்தம் போடுற. நேத்து பிறந்த சின்னச் சிறுசுக, தோடும், வளையலுமா கழட்டிக் கொடுக்கிறப்ப—நான் மட்டும் செக்கொலக்கையாட்டமா சும்மா நிக்கிறதா? நமக்காக சண்டை போடுற பட்டாளத்துக்கு நாம உதவி செய்யாம, வேறே யாரு செய்வாங்க?

---

''பெற்றெடுத்த தந்தையையும் பிரியமுள்ள துணைவனையும்
மற்றுந்தன் தனயனையும் மாளக் கொடுத்தபின்
பச்சையிளம் பாலகனைப் பட்டுடுத்தி வேல் கொடுத்து
இச்சையுடன் களமனுப்பும் மறத்தாயர் எங்கள் குலம்.''

மருத.—ஆமா....எல்லாத்தையும் தூக்கி உன் தலைமேலேதானே வச்சிருக்காங்க !

முத்தம்மா.—இந்த மண்ணிலே பிறந்த எல்லா ருக்கும்தான் இந்த உணர்வு இருக்கணும். மனுசனாப் பிறந்தும் உனக்குத்தான் ஒன்னுமே இல்லையே. வெத்து வீராப்பு இருந்து என்ன செய்ய ?

மருத.—இந்தா—இப்ப வெறிப்பேறிப் போயி நிக்கி றேன். என்னமும் பேசினே....ஒரே கொத்தா கொத்திப்போடுவேன் ! இங்கே கஞ்சிக்கி வழியைக் காணோம்—சோழி வித்த பணத்தை தானம் கொடுத்துப்போட்டு வீரமா பேசுறே!

முத்தம்மா.—பெரிய சூரப் புலி—எடுத்ததுக்கெல் லாம் கொத்துறதிலேதானே நிக்கிறே. உனக் குத்தான் சொல்புத்தியும் இல்லே சுயபுத்தி யும் இல்லே—வேறே எதுதான் புரியப் போகுது ?

மருத.—(ஆங்காரத்தோடு) யாருக்குப் புத்தியில்லே இவ்வளவு தூரத்துக்குத் திமிர் ஏறிப்போச்சா? உன் இடுப்பை முறிச்சு மச்சு வீட்டுக்குள்ளே பாய் விரிச்சுப் படுக்கவச்சாத்தான் நான் மனுசன். (சுற்றி வந்து பரபரப்போடு குதிக் கிறான்)

முத்தம்மா.—கொஞ்சம் நிதானமாகத்தானே நில்லு. ரொம்பத்தான் குதிக்காதே.

மருத —அதட்டுற அளவுக்கு வந்திட்டியா ? இப் பவே போயிரு உங்கப்பன் வீட்டுக்கு. இல் லையினா எலும்பை எண்ணிப்போடுவேன் !

முத்தம்மா.—நாலும் மூணும் ஏழுன்னு எண்ணத் தெரியாது. எலும்பை எண்ணப் போறி யாக்கும்.

மருத.—(கோபம் கொந்தளிக்க) பாக்குறியா புள்ளே—இந்த மருதப்பனை அவ்வளவு லேசா நினைச்சுப் போட்டியா?

[அவளைக் கீழே இழுத்துப் போட்டு அடிக் கிறான்.]

நான் வெளியே போய்ட்டு வர்றதுக்குள்ளே போயிரு. இல்லையின்னா கழுத்தைத் திருகி கொல் லையிலே புதைச்சுப் போடுவேன் !

[மருதப்பன் கோபத்தோடு வெளியே செல்லுகிறான். முத்தம்மாள் தலைவிரி கோலமாக கீழே உட்கார்ந்து ஒப்பாரி வைக்கிறாள்.]

(காட்சி முடிகிறது)

## காட்சி 6

### நிலைமை

பண்ணையார் வீராச்சாமியின் வீடு. மதியம் திரும்பிவிட்டது. உண்டமயக்கம் மேலிட கையில் வெற்றிலைச் செல்லத்தோடு, கூடத்திலிலுள்ள ஊஞ்சல் பலகையில் வந்து உட்காருகிறார் வீராச்சாமி. ஏப்பம் முறுக்கிக் கொண்டு வருகிறது அவருக்கு. அவர் அறியாமல் முனியாண்டி பின்னால் வந்து நிற்கிறான்.

வீராச்சாமி.—(தனிமொழியாக ஏப்பத்தோடு) நானும் எத்தனையோ மருந்துக சாப்பிட்டுப் பார்த்தாச்சு. வாயு சம்மந்தமா இப்படி ஏப்பம் பரியறது நிக்கமாட்டேங்குது. எப்படி நிக்கும். இப்பத்தான் மருந்துகளிலே யும் ஒரே கலப்படமா இருக்கே.

முனியாண்டி.—ஆமாங்க !ரொம்ப அநியாயமாத் தாங்க போச்சு ! நாம நல்ல நெல்லிலே கருக்காயைக் கலக்கிற மாதிரி மருந்திலே தண்ணீரையைக் கலக்குறுங்க போலேருக்கு !

வீரா.—(கோபமும் திகைப்பும் கலக்க திரும்பிப் பார்த்து)நீ எப்படா.. ......எனக்குப் பின் னாலே வந்து நின்னே. பெரிய மேதாவி பாரு.. உங்க கருத்தைச் சொல்ல வந்திட்டீங்களோ ! அகராதி. ......பிடிச்ச பய..........

[முனியாண்டி மெதுவாக உள்ளே நழுவுகிறான்.]

வீரா.—(வேலைக்காரன் பின்னால் நிற்கிறான் என்ற நினைவோடு) நீங்களெல்லாம் இப்படிப் பேசப் போயித்தான் மூணுவது உலக மகா யுத்தமே வரும் போலே இருக்கு. மரக்கா பிடிச்சுப் பத்து மூடை நெல் வகையா அளக்கத் தெரி யாது!—நெல்லிலே கருக்காயைக் கலக்கிறதை மட்டும் கவனமா...... .....பார்த்துவச்சி ருக்கான். டே..........உன்னை வீட்டோட வச்சிருந்தா............என்னிக்கு இருந்தா லும் எனக்குக் குழி தோண்டத்தான் போறே! அறிவு கெட்ட பயலே.........இப்படி.... வாடா முன்னாலே

[சுமார் 45 வயது மதிக்கத்தக்க, கண்ணிய மான உடையணிந்த பேராசிரியர் தெய்வ நாயகம் உள்ளே வருகிறார்].

தெய்வநாயகம்.—(வந்துகொண்டே) என்ன வீராச் சாமி .........நீயாகவே பேசிக்கொண்டிருக் கிறாய் !

வீரா.—(திடுக்கிட்டுத் திரும்பி)—பரபரப்புடன் எழுந்து—குழைவும் பணிவும் நிறைய வாங்க ......வாங்க..................இந்த முனி யாண்டி பய பின்னாலே நின்னுக்கிட்டிருந் தான். அவன் கூடத்தான் பேசிக்கிட்டிருந் தேன். போயிட்டான் போலேருக்கு. நிக்கிறீங்களே............உட்காருங்க

தெய்வ.—(உட்கார்ந்துகொண்டே) நீயும் உட் காரு வீராச்சாமி.

வீரா.—திடீரின்னு நீங்க வந்து நின்னவுடனே நான் அசந்தே போயிட்டேன். உங்களுக்கு இருக் கிற பேருக்கும் புகழுக்கும் அந்தப் பட்டணத் தை விட்டுவிட்டு இந்த பிறந்த மண்ணை நினைச்சு—எப்பவாவது—கிராமத்திற்கு வர் றதே நாங்க செய்த புண்ணியம்......தான் ! உங்களை நினைக்கிறப்ப..........இந்த கிரா மத்துக்கே........பெருமை தாங்க.

---

"அறத்தின் தொட்டில் பாரதம், அதை ஆக்கிரமிப்பவன் யாரவன் ?"

தெய்வ.—வீராச்சாமி........என்னைப்போல படிச்சவங்க கிராமத்தையே மறந்து போறதினுலேதான் கிராமங்கள்—நாம் சுதந்திரம் வாங்கி இத்தனை வருடங்களாகியும்—இன்னமும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கு. இங்கே—எனது கடமையைச் செய்வதற்காகத்தான் வருடத்திற்கு ஒரு முறையாவது ஓடிவருகிறேன்.

வீர.—(சிரித்துக்கொண்டே) நீங்க சொல்லறதைப் புரிஞ்சுக்கிற அளவுக்குக்கூட நான் படிக்கல்லீங்களே. அட.............சும்மா பேசிக்கிட்டிருக்கேன் பாருங்களேன். தாகத்துக்குக் கொண்டாரச்சொல்லட்டுமா? (உள் பக்கமாகத் திரும்பி) டே........முனியாண்டி [முனியாண்டி..........தொண்டர் படை உடையுடன் உள்ளிருந்து வருகிருன்]

வீரா.—(சற்று கோபத்தோடு) பார்த்திங்களா இவனுக்கு இருக்கிற திமிரை. இந்தாடா மறுபடியும் இந்தக் கால் சட்டையை போட்டுகிட்டு வந்து நின்னுட்டேயில்ல!—இனிமே நீ இங்கே வேலை செய்ய லாயக்கில்லை. பொழுது சாய கணக்கைப் தீர்த்துட்டுப் போயிரு!

முனி.—(திகைப்போடு) என்னங்க இப்படிச் சொல்றிங்க..........நான் தப்பு ஒன்னும் செய்யலிங்களே?

தெய்வ.—என்ன வீராச்சாமி? வேலையிலிருந்து விலக்கும் அளவுக்கு..........என்ன கோபம் வந்து விட்டது உனக்கு?

முனி.—அடங்கி ஒடுங்கி வேலை செய்யவேண்டியவனுக்கு எதுக்குங்க இந்தத் தொண்டர் படை விவகாரமெல்லாம். விடிஞ்சா லெப்ட் ரைட் போட்டுக்கிட்டு நிக்கத்தானே நேரம் சரியா இருக்கு.

தெய்வ.—(வியப்போடு) இப்பொழுதுதான் எனக்கு முழுவதுமாகப் புரிகிறது. இவன் தொண்டர் படையில் சேர்ந்ததற்காகவா இத்தனை கோபம் வருகிறது உனக்கு. இவன் ஆர்வத்தோடு தொண்டர் அணியில் சேர்ந்து பயிற்சி பெறுவதை நீ பாராட்டவேண்டியவன். கோபப் படுகிருயே.

வீரா.—நீங்க ஒண்ணு. டவுன் சைட்டிலே இருக்கிற மாதிரி நினைக்கிறிங்க............நாலு உதவாக்கரை பசங்க ஒன்னு சேர்ந்து நின்னுட்டா சரியாப்போச்சுங்களா?

தெய்வ.—உன்னைப் போன்றவர்களும் அவர்களோடு ஒன்று சேர்ந்து நிற்பதை யார் தடுத்தார்கள்.

வீரா.—இவங்களோட சேர முடியுமா? நாலு நாளைக்கு சங்கு ஊதிட்டுப் போவாங்க.

தெய்வ.—வீராச்சாமி!—நீண்ட நாட்களாக அடிமைத் தனத்தில் ஊறிக்கிடந்த நமக்கு—தியாக உணர்வும். நல்லசிந்தனையும் மறைந்து எதிலும் சுயநலமும் சோம்பேறித்தனமும் நிறைந்துவிட்டது. பழைய பண்பாடுகள் இன்னமும் நம்மை வந்தடையவில்லை. உதாரணத்துக்கு உன்னையே எடுத்துக் கொள்ளலாம்; வாழ்க்கையிலே சகல வசதிகளும் நிரம்பி இருக்கிறது. எந்த ராஜா—எப்படி வந்து அரசாண்டாலும், அதைப்பற்றி கவலையே இல்லை உனக்கு. அதனுல்தான் இந்த நாட்டைப்பற்றியோ—அதன் எல்லையில் சூழ்ந்து வரும் ஆபத்தைப்பற்றியோ நீ திரும்பியே பார்க்கவில்லை. முல்லைக்கால்வாயில் தண்ணீர் வருவது நின்றுவிட்டால் மட்டுமே உனக்குக் கவலை ஏற்படும்.

வீரா.—என்னங்க..........பச்சையா சொல்றிங்களே!

தெய்வ:—இந்தத் தொண்டர் படையின் அடிப்படையைத்தான் சொல்லுகிறேன் வீராச்சாமி. உனது வீட்டில் பொருள் களவு போய்விட்டால்—அல்லது உனது விவசாயம் பகைவர்களால் சேதப்படுத்தப்பட்டால், நீ என்ன செய்வாய்?

வீரா.:—முதல்லே........போலீசிலே பிராது கொடுக்க வேண்டியதுதான். நாமலா என்னங்க செய்ய முடியும்.

தெய்வ.:—அப்படியானுல், உன்னையும்—உனது சொத்துக்களையும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறதென்பது தெரிகிறதல்லவா? நமது தேசத்தின் வடக்கு எல்லையிலே வஞ்சக நெஞ்சம் கொண்ட எதிரிகள்—நமது ஜனநாயக வாழ்வின் சீரமைப்பை நாசமாக்க விழிப்புடன் பதுங்கி இருக்கிருர்கள். நம்மைக் காத்துக் கொள்ளவும் நமக்குச் சக்தி இருக்க வேண்டாமா? ஆகவே—யுத்த நெருக்கடி காலத்தில் அனுபவம் பெற்ற போலீசார் ராணுவத்திற்கு உதவியாக அனுப்ப வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், உள் நாட்டில் போக்கிரிகளாலும், குண்டர்களாலும், தனி மனிதர்களின் உடமைகளுக்கு சேதம் ஏற்படாதவாறு காப்பாற்றி, அமைதியை உண்டாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தொண்டர் படை அமைத்து பயிற்சி கொடுக்கப்படுகிறது. இவர்கள்—கிராம சீரமைப்புக்குத் தேவையான எல்லா நல்ல காரியங்களிலும் ஈடுபடுவார்கள். முனியாண்டி தொண்டர் படையில் சேர்ந்திருந்தால் உன்னைப் போன்ற பிரபுக்கள் அவனுக்கு, வேண்டியதைக் கொடுத்து வாழ்த்துவது உனது கடமையாக இருக்க—வேலையிலிருந்தே விலகிக் கொள் என்கிருய். நாளை—நாட்டுக்கே ஒரு நெருக்கடி வரும்பொழுது அதில் உனக்கும் பங்கில்லையா?



வீரா.:—இவ்வளவு தூரம் என்னைப்போல இருக்கிறவனுக்கு யாருங்க எடுத்துச் சொல்றுங்க.

---

**"பற்றி நின்ற பகைமை தன்னை
பஞ்சு போல ஊதுவோம்!"**

தெய்வ :—(சிரித்துக்கொண்டே) உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா என்ன? சர்க்கார் தொண்டர் படையின் அடிப்படைத் தத்துவத்தைப்பற்றி நிறையவே சொல்லி இருக்கிறார்கள். 1963-ம் ஆண்டு, மனிதர் குல மாணிக்கம், பாரதத்தின் முடிசூடா மன்னன், நேருஜி, இந்த நாட்டிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களிலும், குடியரசு தினத்தன்று, தொண்டர் படையை ஆரம்பித்து வைத்தார். உனக்கும், உனது நண்பர்களுக்கும், இதைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமிருந்திருக்காது. வீராச்சாமி—இந்த நாட்டுக்கு வரும் பொதுப் படையான அபாயத்தில் ஏழை—பணக்காரன் என்ற வேறுபாடு இருக்க முடியாது! எல்லோரும் ஒரே குரலாக ஒற்றுமையாக நின்றால் மட்டுமே—உலகத்தோடு நாமும் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

வீரா :—வெளிப்படையா..............அப்படியே சொல்லிட்டிங்க. சின்ன வயசிலேயிருந்து இப்படித்தான் பேசுவிங்க! இப்ப நீங்க சொன்னதைக் கேட்டதுக்கப்புறம் நானும்—ஏதாவது நல்லது செய்யணும்னுதான் தோணுது. (முனியாண்டியின் பக்கமாகத் திரும்பி) முனியாண்டி—நீயும் தொண்டர் படையிலே சேர்ந்துக்கோ. இங்கேயும் வேலையைப் பாரு!

தெய்வ. :—முனியாண்டி—இந்த உடையெல்லாம் உனக்கு யார் தைத்துக் கொடுத்தது.

முனி. :—நானேதானுங்க எடுத்துக்கிட்டேன்.

தெய்வ. :—என்ன வீராச்சாமி இது? எனக்கு வியப்பாக இருக்கிறது. இவனுக்கு நீ கொடுக்கும் குறைந்த சம்பளத்தில், இவனே தொண்டர் படைக்கான உடைகள் எடுத்திருக்கிறான். இவனுக்கு ஏற்பட்டிருக்கும் நாட்டுப்பற்று—நல்ல வசதிகளோடு வாழும் உனக்கு ஏற்படவில்லையா?

வீரா. :—நாளைக்கே இவனுக்கு, நானும் ஒரு சட்டையும் பனியனும் தச்சுக் கொடுத்துப் போடுறேன்.

தெய்வ. :—(புன்சிரிப்போடு) இப்போதுதான் நான் வந்த காரியத்தை ஆரம்பிக்கப் போகிறேன். முனியாண்டிக்காக ஐந்து ரூபாய்கள் செலவு செய்து விட்டால் உனது கடமை தீர்ந்து விடுமோ? இந்தத் தொண்டர் படையின் அமைப்பு நமது கிராமத்தில் நிரந்தரமாக நீடிப்பதற்காக, அவர்களுக்கென, உனக்குச் சொந்தமான மந்தையடியில், உனது செலவிலேயே ஒரு கட்டிடம் கட்டித்தர வேண்டும்.

வீரா. :—(திகைப்புடன்) என்னங்க......சுமக்கத் தக்கனே சொல்லுங்க?

தெய்வ. :—உன்னால் முடியும்—இதை..........நீ செய்து கொடுப்பாய் என்ற நம்பிக்கையோடு தான் சொல்லுகிறேன். நமது கிராமத்தின் நிரந்தரமான—வருங்கால நலனுக்காக, இந்த நல்ல காரியத்தைச் செய்து கொடுக்க உனக்கொரு வாய்ப்புக் கிடைத்ததை நினைத்து.... நீ மகிழ்ச்சியடைய வேண்டும்.

வீரா. :—(திகைப்பு மாறாமல்—சமாளிக்கும் பாவனையாக) நாலு பேரு சேர்ந்து செய்ய வேண்டிய காரியமில்ல இது.

தெய்வ. :—இந்த நாலு பேர்களை எதிர்பார்த்துத் தான் எந்த நல்ல காரியமும் நடந்து முடிய தாமதமாகிறது. நீயே முன்னால் நின்று இந்த காரியத்தைச் செய்து முடித்து—அந்த நாலு பேர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கக் கூடாதா? நீ தனித்து நின்று செய்ய முடியாத காரியமா இது. இதற்காக நீ செலவு செய்யும் பணம் கொஞ்சமாக இருக்கலாம். ஆனால் கிராமமே உன்னை வாழ்த்தும்போது, அதை விலை மதிக்க முடியுமா?

வீரா. :—இவ்வளவு தூரம் அழுத்தமா......உங்க வாயாலேயே சொல்லிட்டிங்க. நீங்க சொல்றதுக்கு நான் மதிப்புக் கொடுத்துத் தான் ஆகவேண்டியிருக்கு. நீங்க சொன்னபடியே செய்து தாரேன்!

முனி. :—(உற்சாகம் நிறைந்த ஆவேசத்தோடு) இனிமே நம்ம ஊரு—நம்ம நாடு எல்லாத்துக்குமே நல்ல காலம் வந்திரிச்சு!

தெய்வ. :—(சிரித்துக்கொண்டே) பார்த்தாயா வீராச்சாமி—முனியாண்டிக்கு இருக்கும் உற்சாகத்தை. இதில் உனக்கும் பங்கு இருக்க வேண்டாமா? சரி......எனக்கும் நேரமாகிறது. இன்று மாலையில் கிராமத்தில் நடக்கப்போகும் கூட்டத்தில், தொண்டர் படைக்காக நீ செய்யப் போகும் அரிய நன்கொடையைக் குறித்து அறிவித்து விடுகிறேன். கூட்டத்துக்கு நீயும் அவசியம் வந்துவிடு! (எழுந்து) அப்போ........... நான் போய் வரட்டுமா?

வீரா. :—(எழுந்து நின்று கும்பிட்டு) சரி போயிட்டு வாங்க.

[தெய்வநாயகம் சென்ற பிறகு தலையில் கையை வைத்தபடியே கவலையோடு உட்கார்ந்திருக்கிறார் வீராச்சாமி].

முனி. :—என்னங்க இது? என்னென்னவோ சொல்லிப்போட்டு இப்படி உட்கார்ந்திட்டிங்க.

வீரா. :—எனக்கு மூச்சு முட்டுதடா!—நாலு பேருக்கு முன்னாலே சொல்லி வைக்கப் போறாரு.

முனி. :—(உற்சாகத்துடன்) அப்ப எல்லாரும் ஒன்னு சொன்னாப்பிலே கை தட்டப் போறாங்க பாருங்க!

வீரா. :—(எரிச்சலுடன் எழுந்து) எல்லாம் உன்னாலே வந்த வினைதான்!

[முனியாண்டி உள்ளே ஓடுகிறான்]

(திரை விழுகிறது).

---

"பொங்கிவரும் மாநதிகள் புனிதப் பிறப்பிடமாம் - அத் துங்கமலைக் காவாமல் தூங்கிக் கிடப்போமா!"

கிராம நலம் பகுதி-2

GRAMANALAM PART 2

# பஞ்சாயத்து அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெறுகிறது.)

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்குதல்—பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் களின் கீழ் உள்ள விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீனளம் பற்றிய வேலைத் திட்டங்கள் கோரப்படுகின்றன.

## Fourth Five-Year Plan—Formulation—Schemes under Agriculture, Animal Husbandry and Fisheries by Panchayats and Panchayat Unions—Draft Plans—Called for

## (Memorandum No. 158605, P-2/ R.D. and L.A. dated 17th September 1965)

உணவு உற்பத்தியைப் பெருக்குதல் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் மிக முக்கியமான பொறுப்புகளில் ஒன்ருகும் என்பதை; 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் முன்னுரை, தெளிவாக வலியுறுத்தியுள்ளது. தன்னுடைய பிரதேச எல்லைக்குள் விவசாயத்தைப் பெருக்குதல், அந்தப் பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பு என்று, சட்டத்தின் 65-வது பிரிவு வரையறை செய்துள்ளது.

2. விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீனளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக என்று, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு லட்சம் ரூபாய் விவசாய மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த விவசாய மானியத்தின்கீழ் எடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி இல்லை என்ற உண்மையை, கடந்த சில ஆண்டுகளின் அனுபவம், நமக்கு உணர்த்தியுள்ளது. அந்தந்தப் பிரதேசங்களுக்கு விசேஷமாக உள்ள தேவைகள், பிரதேச மாறுபாடுகள், ஆகியவற்றை மனத்தில் கொள்ளாமல், எல்லா இடங்களுக்கும், ஒரே மாதிரியான வளர்ச்சித் திட்டவேலை முறையை வரையறை செய்ததே, உற்சாகமில்லாத ஒரு நிலை ஏற்படக் காரணமாயிற்று. வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மட்டுமல்லாமல், வேலைத் திட்டங்களை உருவாக்கும் பொழுதும் மக்கள் தீவிரமாகப் பங்கு கொண்டாலன்றி, மக்களின் பயனுள்ள ஒத்துழைப்பை அடைந்ததாகக் கூற முடியாது என்ற உண்மையும் இப்போது நன்கு விளங்கி வருகிறது.

> **பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க.**
>
> நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய முக்கியமான அரசாங்க ஆணையின் தமிழாக்கத்தை இங்கே காணலாம். இதை எல்லா பஞ்சாயத்துக்களும் கவனித்து, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

3. எனவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீனளம் ஆகிய துறைகளில் தன்னுடைய உற்பத்தித் திட்டங்களை, தானே தயார் செய்து கொள்ள வேண்டும் என்று கருதப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பஞ்சாயத்து யூனியனுக்குக் கிடைக்கக்கூடிய தொகை, ரூபாய் இரண்டு லட்சமாக இருக்கும். இதை மனத்தில் வைத்துக்கொண்டு, மிகவும் அவசியமானவை என்றும், வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படக் கூடும் என்றும், பஞ்சாயத்து யூனியன் கருதுகின்ற வேலைத் திட்டங்களையே பஞ்சாயத்து யூனியன்கள், உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

4. இந்த வேலைத் திட்டங்களை உருவாக்கும்பொழுது, பஞ்சாயத்து யூனியன் மன்றம், கீழ்க்கண்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளலாம் :—

(அ) சொல்லப்படுகிற யோசனைகள், விவசாயம் கால்நடைப் பராமரிப்பு, மீனளம் ஆகியவை சம்பந்தப்பட்டவை மட்டுமாகவே இருக்கவேண்டும். இந்தத் துறைகளில்கூட, அதிகார வரம்புக்குட்பட்ட இடத்தில் பஞ்சாயத்து யூனியன் செயல்படுத்தக் கூடியவைகளாகவே இருக்க வேண்டும். அமைப்பு முறை, அளவு ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது, அரசாங்கம், தன்னுடைய துறைகளின் மூலமாகவே செயல் படுத்தக் கூடிய சில வேலைத் திட்டங்கள் உள்ளன. அப்படிப் பட்ட மிகப் பெரிய வேலைத் திட்டங்களை, பஞ்சாயத்து யூனியன், விவசாயம் சம்பந்தமான வேலைத் திட்டத்தை உருவாக்கும் பொழுது,மேற்கொள்ளக் கூடாது. உதாரணமாக, தன்னுடைய பிரதேசத்தில், ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும் என்பது, மிகவும் பயனுள்ள ஒரு யோசனையாக இருக்ககலாம்; ஆனல், தற்சமயம் உள்ள நிலையில், இந்த யோசனை, பயன்படாதது மட்டுமல்ல; பொருத்தமற்றதும் கூட. ஏனெனில், அப்படிப்பட்ட ஒரு நிலையத்தை நடத்துவதற்குப் போதிய நிதி வசதியோ, தொழில் நுட்பத்திறனே, பஞ்சாயத்து யூனியனுக்குக் கிடையாது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் எடுத்துச் செயல்படுத்தக்கூடிய வேலைத் திட்டங்களையே, பஞ்சாயத்து யூனியன் மன்றம், கருத்தில் கொள்ள வேண்டும். மன்றத்தின் அபிப்பிராயத்தில், அந்தப் பிரதேச வளர்ச்சிக்கு மிக மிக அவசிய

மானதாயும், அதைச் செயல்படுத்தாவிட்டால், அந்தப் பிரதேசத்தில் விவசாய வளர்ச்சி வெற்றி பெறுது என்று கருதப்படுகிறதுமான நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்ற மிக முக்கியமான வேலைத் திட்டங்களைப்பற்றி யோசனை கூறுவதில் தடை ஒன்றுமில்லை. ஆனாலும், அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டியது என்ற அளவில் உள்ள ஒரு திட்டமாக இது பயன்படுமே தவிர, வட்டாரத்தின் விவசாயத் திட்டத்தின் ஓர் அம்சமாக, அத்தகைய வேலைத் திட்டம் அமைய முடியாது. சுருங்கச் சொன்னால், வட்டாரத்தினால் ஏற்றுச் செயல்படுத்த முடியாத எந்த வேலைத் திட்டத்திற்கும், இந்த நிதியை ஒதுக்குதல் கூடாது.

(ஆ) அந்தந்த இடத்திற்கு ஏற்றததாகவும், செயல் படுத்தக் கூடியதாகவும், வேலைத் திட்டங்கள் இருக்க வேண்டும். பிரதேசத்தின் தேவைகளை மட்டுமன்றி, அங்கே உள்ள ஆதாரங்கள், கிடைக்கக்கூடிய வளங்கள் ஆகியவற்றையும் மனத்தில் கொண்டு, வேலைத் திட்டங்கள் திட்டப்பட வேண்டும். உடனடியாக முடியக்கூடியதும், விரைவில் பயன் அளிக்கக்கூடியதும், பெருவாரியான மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடியதுமான, வேலைத் திட்டங்களுக்கு, முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

(இ) மேலே சொல்லப்பட்ட யோசனைகளை மனத்தில் கொண்டு, தங்களுடைய பிரதேசங்களுக்கான வேலைத் திட்டங்களைத் திட்டி அனுப்புமாறு, பஞ்சாயத்துக்களை, பஞ்சாயத்து யூனியன்கள் கேட்க வேண்டும். இந்தத் திட்டங்கள் எல்லவாற்றையும் பற்றிய தகவல்களையும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், சேகரித்துத் தொகுத்து, இந்த வேலைத் திட்டங்கள் செயல்படுத்தும் முறையில் உள்ள பிரச்னைகள் சம்பந்தமாக, அவைகளை மாவட்ட விவசாய அதிகாரி, மாவட்ட கால்நடை அதிகாரி, மீனளத்துறை அதிகாரி ஆகியோருக்கு, தொழில் நுட்ப சம்பந்தமான ஆலோசனைகளையும், பெறுவதற்காக வேண்டி, அனுப்பி வைப்பார். தொழில் நுட்ப அதிகாரிகளின், ஆலோசனைகளுடன், இந்த வேலைத் திட்டங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் முன், பரிசீலனைக்கு வைக்கப்படும். சம்பந்தப்பட்ட துறைகளின் தொழில் நுட்ப அதிகாரிகளை, இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைத்து அவர்களுடைய யோசனைகளைக் கூறுமாறு, கேட்டு கொள்ள வேண்டும். இந்தத் தொழில் நுட்ப அதிகாரிகள் கூறும் தீர்க்கமான யோசனைகளுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுத்து, அவைகளை நன்கு ஆராய வேண்டும். இருந்தாலும், அவைகளிலிருந்து, மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்க, பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கு உரிமை உண்டு. அத்துடன், மன்றத்தின் கருத்தில் மிகவும் பயனுள்ளவை என்றும், அவசியமானவை என்றும், கருதப்படுகிற எந்த வேலைத் திட்டத்தையும், அவை தொழில் நுட்ப வல்லுநர்களால் சிபாரிசு செய்யப்படாமல் இருந்தாலும்கூட, பஞ்சாயத்து யூனியன் மன்றம், தனது திட்டத்தில், சேர்த்துக் கொள்ளலாம்.

(ஈ) ஒவ்வொரு வேலைத் திட்டத்திற்கும், கோரப் படுகிற நிதி ஒதுக்கீடு, தனியாகக் காட்டப்பட வேண்டும்.

(உ) சில பிரதேசங்களில் மீன் அபிவிருத்திக்கான வசதிகள் குறைவாக இருக்கலாம். சில இடங்களில் விவசாய வளர்ச்சிக்கான வளங்கள் குறைவாக இருக்கலாம். வேலைத் திட்டங்களை உருவாக்கும் பொழுது, மன்றமானது, அந்தந்தப் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வசதிகளை ஆராய்ந்து, ஒரு பிரிவுக்குக் குறைவாகவும், ஒரு பிரிவுக்கு அதிகமாகவும், நிதி ஒதுக்கலாம். இருந்தாலும், பிரதேசத்தின் நீண்ட எதிர்கால நலனை மொத்தமாகக் கருதி, எந்த ஒரு பிரிவும் ஒரேயடியாக விலக்கப்பட்டு விடாமல், பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே, பஞ்சாயத்து யூனியன் மன்றம், விவசாயம், கால் நடைப் பராமரிப்பு, மீனளம் ஆகிய மூன்று பகுதிகளுக்கான குறைந்த பட்ச வேலைத் திட்டங்களை, தொழில் நுட்ப வல்லுநரின் ஆலோசனையைப் பெற்று, உருவாக்க வேண்டும்.

(ஊ) வேலைத் திட்டங்களை உருவாக்கும்பொழுது, பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய நன்கொடை, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி உதவியின் அளவு முதலியவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உதாரணமாக, பஞ்சாயத்துயூனியனுக்கு, அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கக்கூடிய தொகை இரண்டு லட்சம் ரூபாய் என்றால், அத்துடன் பஞ்சாயத்து யூனியன் ஈட்டு மானியமாக ரூ. 50,000 அளிக்க முன் வந்தால், வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைக்க, மொத்தம் இரண்டரை லட்சம் ரூபாய்கிடைக்கும். பஞ்சாயத்து யூனியன், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் நன்கொடை சேகரித்துக் கொண்டால், அந்தத் தொகையும், அரசாங்க மானியமான இரண்டு லட்சம் ரூபாயும், பஞ்சாயத்து யூனியனுக்கு கிடைக்கும். இந்த நிலையில், பஞ்சாயத்து யூனியன், அரசாங்கத்தினிடமிருந்து இரண்டு லட்சம் ரூபாயோடு தன்னுடைய சொந்த நன்கொடையாக ஒரு லட்சம் ரூபாயும் திரட்டிக் கொண்டு மொத்தம், மூன்று லட்சம் ரூபாய்க்கு திட்டம் போடலாம். ஆனால், ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைந்த அளவில் பஞ்சாயத்து யூனியன் நன்கொடை இருந்தால், அதற்குத் தகுந்த வகையில், அரசாங்க மானியமும் குறைக்கப்படும்.

(எ) எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களினாலும், திட்டப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் அனைத்தையும், அரசாங்கம், கிராமவளர்ச்சி நெறியாளர், விவசாயத் துறை நெறியாளர், கால்நடைப்பராமரிப்புத் துறை நெறியாளர், மீனளத்துறை நெறியாளர், மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் துறைத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து தக்கமுறையில் பரிசீலிக்கும். அதாவது, எல்லா வட்டாரங்களுக்கும் சம அளவான நியதி முறைகளை கையாளவேண்டிய அவசியத்தை மனதில் கொண்டு, நிதிநிலைமைகளையும் மற்ற வசதிகளையும் கணக்கிட்டுப் பார்த்து, இந்த வேலைத் திட்டங்கள் பரிசீலனை செய்யப்படும். இத்தகைய பரிசீலனை மேற்கொள்ளும்பொழுது, பஞ்சாயத்து யூனியனின் விருப்பங்களும், அவை உருவாக்கியுள்ள வேலைத் திட்டங்கள் பற்றிய வரிசைக் கிரமமும், ஆழ்ந்து கவனிக்கப்படும்.

5. இந்த உத்தரவு கிடைத்த உடனே, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், வேலைத் திட்டங்களை உருவாக்கி அனுப்புமாறு பஞ்சாயத்துக்களைக் கேட்க வேண்டும். பஞ்சாயத்துக்களின் வேலைத் திட்டங்களைத் திட்டுவதில் கிராமசேவக்குகள், வளர்ச்சி அதிகாரி (விவசாயம்), வளர்ச்சி அதிகாரி (கால்நடைப்பராமரிப்பு) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் முதலியவர்களிடமிருந்து என்னென்ன உதவிகள் தேவையாக இருக்குமோ அவை அனைத்தும், பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு பஞ்சாயத்து வேலைத்திட்டங்கள் உருவான பிறகு தொழில்நுட்ப அதிகாரிகளால் அவை பரிசீலனை செய்யப்படும். பஞ்சாயத்துக்கள் திட்டி அனுப்பியுள்ள இந்த வேலைத் திட்டங்களை எல்லாம், அவற்றை நிறைவேற்றும் வழிவகைகள் பற்றி தொழில் நுட்ப வல்லுனர்கள் அளித்துள்ள யோசனைகளுடன், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் முன், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் வைப்பார். இவை மன்றக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும்பொழுது, சம்பந்தப்பட்ட துறைகளின் தொழில்நுட்ப அதிகாரிகள் அந்த பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வகையில் அழைக்கப்படவேண்டும்.

இவ்வாருக, வட்டார விவசாயத் திட்டம் சம்பந்த மாகத் தன்னுடைய சிபாரிசுகளைப் பஞ்சாயத்து யூனியன் மன்றம் முடிவு செய்து, அந்த முடிவான சிபாரிசு களின் பிரதிகளை, அரசாங்கத்திற்கு, உடனடியாக அனுப்பிவைக்க பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அதிகாரம் அளிக்கும்.

6. இந்த முக்கிய வேலையை உடனடியாக மேற் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். சம்பந்தப் பட்ட அதிகாரிகள் எல்லா நிலைகளிலும் உடனுக்குடன் இந்த விஷயத்தைக் கவனித்து ஆவன செய்து முடிக்க வேண்டும்.

(அ) ஆகவே, வேலைத் திட்டம் நிறைவேறுவதற்குக் கீழ்க்கண்ட கால அட்டவணை வரையறுக்கப்பட்டுள்ளது.

| (1) | | (2) |
|---|---|---|
| 10—10—1965 | .. | பஞ்சாயத்து வேலைத் திட்டங்கள் கிடைக்க கடைசி நாள். |
| 25—10—1965 | .. | தொழில்நுட்ப அதிகாரிகள் வேலைத் திட்டங்களைப் பரிசிலனை செய்ய கடைசி நாள். |
| 15—11—1965 | .. | பஞ்சாயத்து யூனியன் மன்றம் வேலைத் திட்டங்களைப் பற்றி முடிவாகத் தீர்மானிக்க கடைசி நாள். |
| 25—11—1965 | .. | வேலைத் திட்டத்தின் பிரதிகளைக் கிராம வளர்ச்சி நெறியாளர், மாவட்டக் கலெக்டர், சம்பந்த பட்ட மாவட்ட அதிகாரி களுக்கு அனுப்பி வைக்க கடைசி நாள். |

(ஆ) இந்தக் காலவரையறையைத் தவருமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். அதே சமயத்தில், இந்தக் கால எல்லைகளை முயற்சி யின் விளைவாக, அநாவசியமான அவகாசமோ, பரப்பரப்போ, உருவாக்கப்படும் திட்டங்களில் தரக் குறைவோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டி யது மிகவும் அவசியமாகும்.

7. இந்தத் திட்டங்கள் உருவாக்குவது சம்பந்தமான தொழில் நுட்ப ஆலோசனைகள், உதவிகள் குறித்து விரிவானஉத்திரவுகளை, மாவட்ட விவசாய அதிகாரிகள், மாவட்டக் கால்நடைப் பராமரிப்பு அதிகாரிகள், மீனளத் துறை உதவி நெறியாளர் ஆகியோருக்கு, சம்பந்தப்பட்ட துறைகளின் தலைவர்கள் அனுப்பி யுள்ளனர்.

8. பரிசோதனையாக நடைபெற இருக்கும், இந்த வேலைத் திட்டம் சிறந்த வெற்றிச் சாதனையாக நிறை வேறும் வகையில் மாவட்டக் கலெக்டர்களும் கோட்ட ரெவின்யூ அதிகாரிகளும் தமது தனிப்பட்ட கவனத்தை இதில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படு கிருர்கள். கோட்ட அளவில் உள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தொழில் நுட்ப அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய ஒரு மகாநாட்டினை, கோட்ட ரெவின்யூ அதிகாரிகள் உடனே கூட்ட வேண்டும். திட்டங்களைத் திட்டும்பொழுது மேற்கொள்ள வேண்டிய பொதுவான நோக்கங்களையும் வழிகாட்டியாக அமையும் குறிப்பு களையும் விளக்கிக் கூறி, கலந்து கொள்கிற அதிகாரிகள் எழுப்புகின்ற சந்தேகங்களைத் தீர்த்து வைக்கவும், இந்த மகாநாடு உதவியாக இருக்கும். கோட்ட அளவில் கூட்டப்பெறும் இந்தக் கூட்டங்களில், குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு கூட்டங்களிலாவது கலெக்டர்கள் கலந்து கொண்டால் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.

9. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் காட்டுகின்ற கவனம் அக்கறை, விவேகம், ஆகியவற்றைப் பொறுத்தே இந்தத் திட்டத்தின் வெற்றி அமையும். இந்த வேலை சம்பந்தமாக அந்தந்த துறையின் தலைவர்கள் (Heads of Department) சில விசேஷ உத்திரவுகளை அனுப்பு வார்கள். அதாவது தமது துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், இந்தத் திட்டத்தில் செலுத்தும் நேர் முகக் கவனம், சொந்த முறையில் செய்கின்ற தரமான வேலைத்திறன் ஆகியவை அந்தந்தத் துறை களின் தலைவர்களால் முக்கியமாகக் கருத்தில் கொள் ளப்படும்.

10. இதுவரையில் வட்டாரங்கள் அனைத்தும் பல் வேறு வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் ஏஜென்ஸி களாக மட்டுமே இருந்து வந்துள்ளன. மேலே விவரித்த முறையில் திட்டமிடும் வேலையை இனிமேல் வெற்றிகரமாக நிறைவேற்றிஞல் கீழ் மட்டத்திலிருந்து திட்ட அமைப்பு என்ற உயர்ந்த மாளிகை சிறந்த அஸ்திவாரத்தின் மீது உருவாக முடியும். திட்டமிடும் முயற்சியின் அடிப்படையில் நிலைக்களங்களாக வட்டா ரங்கள் செயல் படுவதோடு, திட்டத்தை உருவாக்கும் பணியில் சிறந்த பங்கு பெறவும் வாய்ப்பு ஏற்படும். பரீட்சார்த்தமாகத் தொடங்கப்படும் இந்தப் புதிய முயற்சி நல்ல பலன் கொடுக்க வேண்டுமானுல் மக்கள் பிரதிநிதிகளிடம் உள்ள உற்சாக வேகமும் அரசாங்க அதிகாரிகளிடம் உள்ள தொழில் நுட்ப முயற்சியும் தக்க வகையில் ஒன்று சேர வேண்டுமென்பதை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். அரசாங்க அதிகாரிகள், ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் கூடிய தங்கள் தொழில் நுட்ப ஆலோசனையை அளிக்க முன் வர வேண்டுமேயன்றி, தாம் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த யோசனைகளைப் பஞ்சாயத்துக்களின் மீது திணிக்கின்ற முறையிலோ, அவற்றின் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் தடுக்கின்ற வகையிலோ நடந்து கொள்ளக் கூடாது.

*(கிராம நல தல நிர்வாகத்துறையின் 17—9—65 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 158605.)*

---

### மத்திய மக்கள் கௌன்சில்

மத்திய மக்கள் கௌன்சிலின் தலைவர் திருமதி இந்திராகாந்தி, காஷ்மீர் கமிட்டி ஒன்றையும், அதனுடன் கஷ்ட நிவாரணத் துணைக் கமிட்டி ஒன்றையும் அமைத்திருக்கிருர். இக்கமிட்டி ஏற்கனவே இயங்க ஆரம்பித்துவிட்டது. இதன் அலுவலகம் புது டில்லி ராஷ்டிரபதி பவனில் உள்ளது. ஜம்மு-காஷ் மீரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கஷ்ட நிவாரணத்துக்காக ரொக்கமாகவோ அல்லது பண்டங்களாகவோ அனுப் பப்படும் எல்லா நன்கொடைகளும் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. பணமாகவும், பண்டங்களாகவும் குறிப் பாக, கம்பளி ஆடைகள், கம்பளங்கள் ஆகியவையாகவும் தாராளமாய் நன்கொடைகள் வழங்குமாறு இந்தத் துணைக் கமிட்டி இந்திய மக்களைக் கேட்டுக்கொள்கிறது. இந்த நன்கொடைகளை 'மத்திய மக்கள் கௌன்சில், புதுடில்லி' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இவ்வாறு நன்கொடையாக வழங்கப்படும் பொருள்கள் ரெயில்வேக்களில் இலவசமாக ஏற்றிச்செல்லப்படும். இதற்கு அனுப்பப்படும் 'செக்கு'கள் மத்திய மக்கள் கௌன்சில் தலைவரின் பெயரில் இருக்க வேண்டும்.

கிராம வளர்ச்சி நெறியாளர் என்ற புதிய துறையின் தலைவர் பதவி ஏற்படுத்தல்—'கூட்டு அபிவிருத்திக் கமிஷனர்' என்ற பதவி, 'கிராம வளர்ச்சி நெறியாளர்' என்று மாறுகிறது.

**Establishment—Separate Head of Department as Director of Rural Development—Formed—Designation of post of Joint Development Commissioner changed as Director of Rural Development—His functions defined.**

**(G.O. Ms. No. 1664, Public (Special) Department, dated 28th August 1965.)**

1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் கொண்டுவரப்பட்டதின் விளைவாக, நகராட்சி மன்றங்கள்—உள்ளாட்சி நிறுவனங்களின் இன்ஸ்பெக்டர் (Inspector of Municipal Councils and Local Boards) என்றிருந்த பதவி எடுபட்டுவிட்டது. அந்தப் பதவி வகித்தவரின் பொறுப்புகளில் நகராட்சி மன்றங்கள் சம்பந்தமான பொறுப்புகள் பிரதம தேர்தல் அதிகாரியிடம் (Chief Electoral Officer) ஒப்புவிக்கப்பட்டன. அவர் வகித்து வந்த மற்ற எல்லாப் பொறுப்புகளையும், கிராம அபிவிருத்திக் கமிஷனர் (Additional Development Commissioner) நிறைவேற்றி வர, அதிகாரம் அளித்து, அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. நகராட்சி மன்றங்கள்—உள்ளாட்சி நிறுவனங்களின் இன்ஸ்பெக்டரின் அலுவலகம், கிராம அபிவிருத்திக் கமிஷனரின் அலுவலகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பஞ்சாயத்துக்கள்—பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தமானவை என்று ஒரு பிரிவும், நகராட்சி மன்றங்கள் சம்பந்தமானவை என்று மற்றொரு பிரிவும், அந்த அலுவலகத்தில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. இவற்றுள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவை சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கின்ற அலுவலகப் பகுதி, கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கீழும், நகராட்சி மன்றங்கள் சம்பந்தமான அலுவலகப்பகுதி பிரதம தேர்தல் அதிகாரியின் கீழும் இயங்கி வந்தன. பணித்துறை (Establishment) சம்பந்தமான விஷயங்களில், பிரதம தேர்தல் அதிகாரி, மொத்தமாக அலுவலகத் தலைவராக (Head of the Office) ஆக்கப்பட்டார். 1964 ஆகஸ்டில், கிராம அபிவிருத்திக் கமிஷனர் என்ற பதவிக்குப் பதிலாக, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டது, கிராம அபிவிருத்திக் கமிஷனர் வகித்து வந்த பொறுப்புகள் அனைத்தும் கூட்டு அபிவிருத்திக் கமிஷனரிடம் ஒப்புவிக்கப்பட்டன.

2. கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் அதிகாரத்தின்கீழ், வேறு பல பிரிவுகளும், செயலாற்றுகின்றன. அவையாவன :—கிராம நல-தல நிர்வாகத்துறையின் கணக்குப் பிரிவு, உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி), உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூக நலன்), (இந்தப் பிரிவுகள் இப்பொழுது தனித்தனியாகவே இயங்குகின்றன) மற்றும், கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் கீழ் பணிபுரியும் விசேஷ அதிகாரி (பயிற்சி) [Special Officer (Training)] 'கிராம நலம்' பத்திரிகையைப் பதிப்பித்து வெளியிடும் பொதுஜனத் தொடர்பு அதிகாரியின் பிரிவு, (Public Relations Officer's Unit) திட்ட சத்துணவு அதிகாரி (Project Nutrition Officer) ஆகிய இந்தப் பிரிவுகள் நிர்வாக வசதியை முன்னிட்டு, செக்ரடேரியட்டிலேயே இயங்கி வருகின்றன. இந்தப் பிரிவுகள் எல்லாம், தற்சமயம், ஒன்றோடொன்று ஒருங்கிணையாமல், தனித்தனியாக இயங்கி வருகின்றன.

3. உள்ளாட்சிப் பிரிவுகள் என்ற முறையில் பஞ்சாயத்துக்கள்—பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவை, சரிவர பணிபுரிவதைக் கவனிக்கும் பொறுப்பும், அவை மேற்கொண்டுள்ள பல்வேறு சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் பொறுப்பும், கடந்த சில ஆண்டுகளாக, கூட்டு அபிவிருத்திக் கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் அலுவலகம், தனியான ஒரு துறையின் தலைமை அலுவலகமாக (Head of Department) அமைக்கப்பட வேண்டும் என்றும், தற்சமயம் தனித்தனியாக இயங்கி வரும் பல்வேறு பிரிவுகளும், சீரான முறையில் அமைக்கப்பட்டு, ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடன் இயங்க வேண்டுமென்றும், அரசாங்கம் விரும்புகிறது. அதையொட்டி, கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் அலுவலகம், ஒரு துறையின் தலைமை அலுவலகமாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும், இந்த உத்தரவின் இணைப்பில் (Annexure) குறிப்பிட்டுள்ள—தனித்தனியாக இயங்கி வருகிற—பல்வேறு பிரிவுகளும், இத்துறையின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்றும், அரசாங்கம் உத்தரவிடுகிறது. இதுவரையில் செக்ரடேரியட்டில் கிராம நல தல நிர்வாகத் துறையில் செயல்பட்டு வந்த பணிகளில், ஒரு துறையின் தலைவர் செய்யப் பொருந்தும் வேலைகள், கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் அலுவலகத்திற்கு மாற்றப்படும்.

4. கூட்டு அபிவிருத்திக் கமிஷனருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கிராம வளர்ச்சி சம்பந்தமான பொறுப்புகளைப் பார்க்கும்பொழுது, கிராம வளர்ச்சி நெறியாளர் (Director of Rural Development) என்ற பெயர், மிகவும் பொருத்தமுடையதாகவும், பொருள் பொதிந்ததாகவும் இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதையொட்டி, இப்பொழுதுள்ள கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் என்ற பதவியை, கிராம வளர்ச்சி நெறியாளர் என்று மாற்றியமைத்து, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. கிராம வளர்ச்சி நெறியாளருக்கு செக்ரடேரியட்டில் கூட்டுச் செயலாளர் (Joint Secretary) என்ற அந்தஸ்து தொடர்ந்து இருந்து வரும்.

5. கிராம வளர்ச்சி நெறியாளர் ஒரு துறையின் தலைவர் என்ற வகையில், தமது பொறுப்புகளை நிறைவேற்றும் பணியில் உதவுவதற்காக, கிராம வளர்ச்சி துணை நெறியாளர் (Deputy Director of Rural Development) என்ற ஒரு பதவி ஏற்படுத்தப்படும். (இந்தப் பதவியை கிராம வளர்ச்சி கூட்டு நெறியாளர் என்று மாற்றி அரசாங்கம் தற்போது ஆணைபிறப்பித்துள்ளது.) இந்த அதிகாரி, இந்திய நிர்வாகப் பணித்துறையில் உள்ள முதுநிலை அதிகாரிக்கு (Grade pay in the senior time scale of I.A.S.) உரிய ஊதியத்தைப் பெறுவதுடன், மாதம் ஒன்றுக்கு ரூபாய் இருநூறு விசேஷச் சம்பளமும் பெறுவார். இந்தப் புதிய பதவி ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக, பஞ்சாயத்து நிதி இயக்குநர் (கிராம நல-தல நிர்வாகத்துறையின் துணைச் செயலாளர்—[Director of Panchayat Finance (ex-Officio) Deputy Secretary to Government] பதவி எடுபட்டுவிடும்.

இந்த ஆணையினை ஒட்டி, மேற்கொண்டு, செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றிய விரிவான உத்தரவுகளை, கிராம நல-தல நிர்வாகத்துறை பிறப்பிக்கும். பிரதம தேர்தல் அதிகாரியின் அதிகாரத்தினுள் இயங்குகிற நகராட்சி மன்றங்கள் பற்றிய விஷயங்களைக் கவனிக்கின்ற பிரிவுகள் (கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் அலுவலகத்தில் எஞ்சியுள்ள பிரிவுகள்) நிர்வாக அமைப்பு பற்றி, கிராம நல-தல நிர்வாகத்துறை, பரிசிலனை செய்து, தக்க உத்தரவுகள் பிறப்பிக்கும். இந்த ஆணைகளைச் செயல்படுத்தும்போது, சம்பந்தப்பட்ட சட்டங்கள் (Acts) விதிமுறைகள் (Rules) நியதிகள் (Manuals) ஆகியவற்றில் திருத்தங்கள் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை, கிராம நல-தல நிர்வாகத் துறை மேற்கொள்ள வேண்டும்.

## இணைப்பு (Annexure)

கிராம வளர்ச்சி நெறியாளர் ஒரு துறையின் தலைவர் என்னும் புதிய அலுவலகத்துடன் இணைக்கப்படும் பிரிவுகள்.

செக்ரடேரியட்டிலிருந்து :—

1. பொதுஜனத் தொடர்பு அதிகாரியும் (Public Relations Officer) அவரது அலுவலர்களும்.
2. கணக்குப் பகுதி (Accounts Branch) அதிகாரிகளும், அலுவலர்களும்.
3. திட்ட சத்துணவு அதிகாரி (Project Nutrition Officer).
4. விசேஷ அதிகாரி (பயிற்சி), [Special Officer (Training)] அவரது அலுவலர்களும்

மற்ற அலுவலகங்களிலிருந்து :—

1. உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி), [Assistant Development Commissioner (Training)] அவரது அலுவலர்களும்.
2. உதவி அபிவிருத்தி கமிஷனர் (சமூகநலம்), [Assistant Development Commissioner (Social Welfare)] அவரது அலுவலர்களும்.

கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் அலுவலகத்திலிருந்து :—

1. உதவி அபிவிருத்தி கமிஷனர் (பணித்துறை), [Assistant Development Commissioner (Establishment)] மற்றும் கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் தனி உதவியாளர் (அபிவிருத்தி) [Personal Assistant (Development)].
2. சி.டி.இ. மற்றும் எப் பிரிவுகள் (C.D.E. & F. Sections)
3. சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட மூன்று தற்காலிகப் பிரிவுகள் (Temporary Sections)
4. அலுவலக நடைமுறைப் பிரிவின் ஒரு பகுதி (Part of O.P Section).

(அலுவல்கள், அலுவலாளர்கள் பற்றிய விவரங்களை, கிராம வளர்ச்சி நெறியாளர் தீர்மானிப்பார்.)

புதிய பதவி :—

கிராம வளர்ச்சி துணை நெறியாளர் (Deputy Director of Rural Development)

வானொலி பராமரிப்புத் தலைமை அதிகாரியை (Chief Radio Officer) அலுவலகத் தலைவராகவும், கூட்டு அபிவிருத்திக் கமிஷனரை ஒரு துறையின் தலைவராகவும் கொண்ட பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம் கிராம வளர்ச்சி நெறியாளரின் அதிகாரத்தின்கீழ் தொடர்ந்து இருந்து வரும்.

[28-8-1965 தேதியிட்ட பொதுத்துறை (ஸ்பெஷல்)யின் அரசாங்க ஆணை எண். 1664.]

## கிராமத் தொண்டர் படையினருக்குச் சீருடை-பஞ்சாயத்துக்களின் நன்கொடை பற்றி உத்தரவு.

## Village Volunteer Force—Provision of uniforms to members—Contribution by Panchayats—Regarding.

### (Memorandum No. 134672 P1/R.D. and L.A., dated 19th August 1965.)

தற்போதுள்ள உத்தரவுகள்படி, கிராமத் தொண்டர் படையினரே, தங்கள் சீருடை (Uniforms) களுக்கான செலவுகளை ஏற்றுக் கொள்ளவேண்டும்; அதற்கு பஞ்சாயத்து நிதிகளை பயன்படுத்தக்கூடாது. ஆனால் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ள பஞ்சாயத்துக்கள், சீருடைகள் வாங்கும் செலவை ஒட்டி ரூ. 100 நன்கொடை அளிக்கலாம் என்றும், இதற்காக நற்காரியங்கள் செய்துள்ள பஞ்சாயத்துக்களுக்கு, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கலாம் என்றும் இப்போது ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களின் பொது நிதிகளிலிருந்து 50 சதவீதம், இந்த சீருடைகளுக்காக செலவழிக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) இக்கருத்துக்களின் பேரில், தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க, சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். கிராமத் தொண்டர் படையினருக்கு இலவசமாக சீருடைகள் வழங்கினால், அது அவர்களிடையே உற்சாகத்தைப் பெருக்கி, ஒழுங்குணர்ச்சியை வளர்க்க, உதவி செய்யும் என்பது ஒரு கருத்தாகும். ஆகவே இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது சில மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்தாகும். இதற்கு மாறாக, சீருடைகள் வழங்க, பஞ்சாயத்துக்கள் நன்கொடைகள் அளிப்பது, தானாக முன்வந்து செய்யும் இந்த தொண்டுக்கு, பொருத்தமாகாது என்பது மற்றொரு கருத்து. மேலும் இந்த ரூ. 100-ஐக் கொண்டு 5 இன (Set) சீருடைகளையே வாங்கமுடியும் என்றும், இது மனக்கசப்பையும் அதிருப்தியையுமே தோற்றுவிக்கும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே, தன்னிச்சையாகப் பெறும் நன்கொடைகளைக் கொண்டே சீருடைகளுக்கான செலவுகளை சமாளித்துவரும் இப்போதுள்ள வழக்கம் தொடர்ந்து இருந்து வரலாம் என்றும் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபாரிசு செய்துள்ளார்கள்.

(3) சீருடைகளுக்காகும் செலவுகளுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் நிதி அளிக்கலாம் என்ற கோரிக்கைக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் பல கருத்துக்கள் இருந்தாலும், இப்போதுள்ள வழக்கத்தை தொடர்ந்து வருவதே நன்மையெனத் தெரிகிறது. ஆகவே கிராமத் தொண்டர் படையினருக்கு, சீருடைகள் வழங்குவதைப் பொருத்து, இப்போதுள்ள உத்தரவுகளே தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்றும், பஞ்சாயத்து, அல்லது பஞ்சாயத்து யூனியன்கள், அவற்றின் பொது நிதிகளிலிருந்து இதற்காக செலவு செய்யவேண்டிய அவசியமில்லை என்றும், அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 134672.)

---

## ஹரிஜன நலத்துறை அளிக்கும் உதவித் தொகைகள், மலை ஜாதியினருக்கும், பூர்வ குடிகளுக்கும் பொருந்தும்.

## Panchayat Development--Entrustment to Panchayat Unions--Execution of Schemes--Works intended for the benefit of Harijan's and Backward classes--Payment of contribution by the Harijan Welfare Department—Applicability to Scheduled Tribes and Denotified Tribes—Orders passed.

### (Memorandum No. 74473-P4, R.D. and L.A., dated 9th August 1965.)

ஹரிஜன நலத்துறைநெறியாளர்கேட்டுக்கொண்டதன் பேரில், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள், மலை ஜாதியினருக்கும் (Scheduled Tribes) பூர்வ குடிகளுக்கும் (Denotified Tribes) பொருந்தும் என்று, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 9—8—1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 74473.)

# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்

## கோயமுத்தூர் மாவட்டம்

[viii-ம் பக்கத் தொடர்ச்சி]

"ஒவ்வொரு கிராமமும் விவசாயம், கைத்தொழில், கல்வி ஆகியவற்றில் தன்னிறைவு பெற்றுத் திகழ வேண்டும்" என்று இவர் விரும்புகிறார்.

ஜ

**8. திரு பி. என். பரமசிவக் கவுண்டர்** *தலைவர், சுல்தான் பேட்டை பஞ்சாயத்து யூனியன்.*

பல்லடம் தொகுதியில் பாப்பம் பட்டி என்ற கிராமத்தில் செல்வாக்குள்ள குடும்பமொன்றில் பிறந்தவர். வயது 45. இண்டர்மீடியட் வரை படித்தவர். 1944–47 வரை ராணுவத்தில் பணியாற்றியுள்ளார். 1950–52ல் வட்டார வளர்ச்சி அதிகாரி. தற்பொழுது கோவை மேற்கு மாவட்ட பஞ்சாயத்து யூனியன்கள் சங்கத் தலைவர், சூலூர் கூட்டுறவு யூனியன் தலைவர் ஆகிய பதவிகளையும் வகிக்கிறார். வட்டார வளர்ச்சித் திட்டத்தில் மிகுந்த அக்கறையுடன், குடி தண்ணீர் வசதி, ஹரிஜனக் குடி நப்பு வசதி, ரோடு முதலிய பல வேலைகளுக்கு 50 சத வீதம் மக்கள் பங்குத் தொகையைத் தாமே வழங்கி, பல நற்பணிகளைச் செய்திருக்கிறார்.

ஜ

**9. திரு எஸ். சி. செங்கோட்டு வேலப்பன்,** *தலைவர், ஈரோடு பஞ்சாயத்து யூனியன்.*

சென்ற முறையும், ஈரோடு பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்துள்ளார். நசியனூர் பஞ்சாயத்துத் தலைவர். சமுதாய நலத்திட்ட வேலையின்கீழ், பவானிப் பகுதியில் சிறந்த முறையில் பணி புரிந்ததற்காக, நற்சான்றிதழும், ஆயிரம் ரூபாய் பரிசும் பெற்றுள்ளார். நசியனூர் கூட்டுறவு விவசாய பாங்கியின் தலைவராக இருந்துள்ளார். நசியனூர் பாரதி கல்வி நிலையம் என்ற துவக்கப் பள்ளியும், உயர்நிலைப்பள்ளியும் நடத்தி வருகிறார். தமிழ்நாடு கிராமக் கைத்தொழில் போர்டினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நசியனூர் மண் பாண்ட உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

ஜ

**10. திரு கே. எம். சுப்பிரமணியம்,** *தலைவர், கோபிசெட்டி பாளையம் பஞ்சாயத்து யூனியன்.*

1960-லும், 1965-லும், இரண்டு முறையும் இப்பஞ்சாயத்து யூனியன் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆப்பக் கூடல் சத்தி சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குநர்களில் ஒருவர். குள்ளம்பாளையம் கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கத்தின் இயக்குநரும் ஆவார். "விஞ்ஞானப் பாட போதனைகளை நல்ல முறையில் சொல்லித் தருவதற்கான வசதிகள் அடங்கிய பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தப் பட வேண்டும்; அதற்காக எத்தனை செலவினை ஏற்க வேண்டி வந்தாலும், அரசாங்கமும் மக்களும் அந்தச் செலவுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்" என்பது இவருடைய கருத்தாகும்.

**11. திரு கே. வி. ஆறுமுகம்,** *தலைவர், மடத்துக்குளம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 47. தொழில், விவசாயம். சொந்த ஊர், மடத்துக் குளம் வட்டாரத்தில் உள்ள குமர லிங்கம் கிராமம். 1947-லிருந்து குமரலிங்கம் பஞ்சாயத்தின் தலைவர். கடந்த 10 ஆண்டுகளாக உடுமலை கூட்டுறவு நில அடமான பாங்கின் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். குமரலிங்கம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளராக, 1950 முதல் உள்ளார். 1938-ம் ஆண்டிலேயே பள்ளிப் படிப்பு முடிந்ததுமே, பொதுத் தொண்டாற்றி வருகிறார்.

ஜ

**12. திரு சி. ஆர். ராஜப்பா,** *தலைவர், தாளவாடி பஞ்சாயத்து யூனியன்.*

வயது 48. கோவை மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையம் தாலுகாவில் வடமேற்குப் பகுதியில் மிகவும் பிற்போக்கான மலைப் பிரதேசத்தில் உள்ள தாளவாடி யூனியனில் சிம்டஹள்ளி கிராமத்தில் பிறந்தவர். பையன்னபுரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், தாளவாடி பட்டுப்பூச்சி வளர்ப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் சஸ்தி கூட்டுறவுச் விற்பனைச் சங்கத்தின் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார். பஞ்சாயத்து ஆட்சியில் தளராத நம்பிக்கை உடையவர். "பிற்போக்கு பிரதேசத்தில் உள்ள தாளவாடி பஞ்சாயத்து யூனியனுக்கு அரசாங்கம் மேலும் உதவி பல அளிக்க வேண்டும்" என்று இவர் விரும்புகிறார்.

# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்

## கோயமுத்தூர் மாவட்டம்

(படங்கள் எதிர்ப் பக்கத்தில்)

**1. திரு கே. கே. சுப்ரமணியம்,** *தலைவர், அந்தியூர் பஞ்சாயத்து யூனியன்.*

பவானி வட்டாரத்தைச் சேர்ந்த நசலூர் கிராமத்தைச் சேர்ந்தவர். 43 வயது. தேசிய இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியுள்ளார். பள்ளி மாணவராக இருந்த காலம் முதலே, நாட்டுப் பணியில் ஈடுபாடு உண்டு. "கிராமப் பொருளாதாரமும் மனித சுதந்திரமும் முகிழ்ந்தோங்க, பஞ்சாயத்து ஸ்தாபனம் நிச்சயமானதொரு அடித்தளமாகும்" என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்.

**2. திரு ஜி. சாமிக் கவுண்டர்,** *பொங்கலூர் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 60. 1935-ம் ஆண்டிலேயே, கோவை ஜில்லா போர்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இரண்டு முறையும் பொங்கலூர் பஞ்சாயத்து யூனியன் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர்களில் ஒருவர். "நன்கொடைகள், சிறு சேமிப்பு போன்ற மற்ற வசூல் வேலைகளை அபிவிருத்தி வேலை செய்யும் ஊழியர்களிடம் கொடுக்காமல், அவற்றை ரெவின்யூ நிர்வாகத் துறையினரிடமே விட்டுவிடுதல் வேண்டும்" என்பது இவர் கருத்து.

**3. திரு ஏ. பி. குப்புசாமி கவுண்டர்,** *தலைவர், திருப்பூர் பஞ்சாயத்து யூனியன்.*

விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். 1952-ல் இருந்து ஆண்டிப்பாளையம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறார். 1962 முதல், விஸ்வேஸ்வரய்யா சிறு கைத்தொழில் திட்டத்தின் தலைவர். 1960 முதல் திருப்பூர் கூட்டுறவு யூனியன் தலைவர். 1963-ம் ஆண்டிலிருந்து, மங்கலம் உயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழுவில் ஓர் இயக்குநர். சுமார் 60,000 ரூபாய் வரையில் நன்கொடை வசூல் செய்து, உயர்நிலைப் பள்ளிக்கு உறுதியான கட்டிடம் எழும்ப காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

**4. திரு எம். மயில்சாமி** *தலைவர், மதுக்கரை பஞ்சாயத்து யூனியன்.*

வயது 31. சொந்த ஊர் கோவை தாலுகா, குட்டிகவுண்டன்பதி. பி.ஏ. பட்டதாரி. திருமலையம்பாளையம் பஞ்சாயத்து தலைவர். நேர்மை, நாணயம், ஒழுக்கம், இவற்றை இலட்சியமாகக் கொண்டு, கிராம மக்களுக்குப் பணி புரிய வேண்டும் என்பதே இவர் ஆசை.

**5. திரு மு. வெங்கிடுசாமி** *தலைவர், பல்லடம் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 37. பல்லடம் கூட்டுறவு கிராம பாங்கில், ஆறு ஆண்டுகள் இயக்குநராகப் பணியாற்றியுள்ளார். பொதுஜன சேவை, இவர் இலட்சியம். பல்லடம் யூனியனில் உள்ள செம்மிபாளையம் பஞ்சாயத்துத் தலைவர் இவர்.

**6. திரு டி. ராமசாமி;** *தலைவர், வெள்ளகோயில் பஞ்சாயத்து யூனியன்.*

வயது 35. கடந்த 10 ஆண்டுகளாக, மேட்டுப்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர். இப்பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**7. திரு டி. எஸ். காசிலிங்க கவுண்டர்,** *தலைவர், கொடுமுடி பஞ்சாயத்து யூனியன்.*

வயது 54. சொந்த ஊர், ஈரோடு தாலுகாவில் உள்ள தட்டாம் பாளையம். 1957-லிருந்து கொந்தளம் கிராமப் பஞ்சாயத்தின் தலைவர். 1964 ஆண்டு முதல் கொடுமுடி யூனியன் கூட்டுறவுப் பண்டகசாலையின் தலைவர். 1958-லிருந்து கொந்தளம் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்.

[முன் பக்கம் (vii) திருப்புக.]



வெளியிடுபவர் :
திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at A.L.S. Press, Madras-13.


பஞ்சாயத்து
யூனியன் தலைவர்கள்
1
2
3
4
5
6
7
8
9
10
11
12

REGD. NO. M. 7277
© தமிழ்நாடு – அரசாங்கம் 1965



ராஷ்டிரபதி பிறந்த
செப்டம்பர்
5ந் தேதி - ஆசிரிய